REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னாகம், சர்வதாரி பங். எ (காந்தி ஆண்டு 80) 20-3-'49, ஞாயிறு | இதழ் 33

வெளிவந்துவிட்டது 2-ம் பதிப்பு

மொழிப் பயிற்சி

[3-ம் புத்தகம்]

முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி

4-ம், 5-ம் வகுப்புகளுக்கேற்ற இலக்கணப் பகுதிகள் முழுவதும் இந்நூல்மூலம் கற்பிக்கப்பட வசதியுண்டு. பெயராயும் வினையாயும் வருஞ் சொற்கள், ஒருபொருட் பலசொல், சொற்புணர்ச்சி, எழுவாய், பயனிலை, வேற்றுமை, செய்வினை செயப்பாட்டுவினை, முதலிய வினை வகைகளும், பலவித பயிற்சிகளும் இதில் அடங்கியிருக்கின்றன.

விலை ரூபா 1-00 தபாற்செலவு வேறு

சுன்னாகம் : தனலக்ஷ்மி புத்தகசாலை

# வர்தா கல்வி விளக்கம்

## காரைநகரில் மகாநாடு

—— நமது விசேஷ நிருபர் ——

**"இந்தக் காலத்திலே இலங்கையிலும் இந்தியாவிலும் வர்தாக் கல்வித் திட்டத்தைப் பற்றி விசேஷமாக எடுத்து விளக்கக்கூடியவர் ஒருவர் இருந்தால், அவர் ஸ்ரீ ஜி. இராமச்சந்திரன் எம். எல். ஏ. அவர்களே ஆவர் என்று சொல்வது மிகையாகாது."**

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக வர்தா கல்வி முறைப்படி மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஆரம்பிக்கப்படும் வர்தாக் கல்விப் பாடசாலையைக் காரைநகரிலுள்ள ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலையில் அகில இந்திய வர்தாக் கல்விச் சங்கத்தின் உப காரியதரிசியாயிருந்தவராகும் ஸ்ரீ ஜி. இராமச்சந்திரன் அவர்கள் திறந்துவைக்கும்போது, அன்னாரை வரவேற்குமுகத்தால் ஸ்ரீ பொ. நவரத்தினமவர்கள் குறிப்பிட்டார்கள்.

சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல் 5½ மணியளவில் ஸ்ரீ ஜி. இராமச்சந்திரன் அவர்களைக் காரைநகரிலுள்ள 'யாழ்ரன்' கல்லூரியிலிருந்து காரைநகர் ஆதாரக்கல்விச் சங்கத்தினர்களும், கல்வி அறிஞர்களும், பொதுமக்களும் ஊர்வலமாக ஆயிலிசிவஞானோதய வித்தியாசாலைக்கு அழைத்துச் சென்றனர்.

மாலை 6 மணிக்கு வட்டுக்கோட்டைப் பிரதிநிதியும் கல்விப் பகுதி உதவி மந்திரியாருமான ஸ்ரீ க. கனகரத்தினம் அவர்கள் தலைமையில் திறப்புவிழாக் கூட்டம் ஆரம்பமாயிற்று.

ஸ்ரீ பொ. நவரத்தினம் அவர்கள், ஸ்ரீ இராமச்சந்திரன் அவர்களைச் சபையோருக்கு அறிமுகப்படுத்துகையில், வர்தாக் கல்வித் திட்டத்தில் இவர்கள் செய்துள்ள சேவையைப்பற்றி மிகவும் விரிவாக வியந்து பேசினர். ரவீந்திரநாத் தாகூர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கலாசாலையில் பயிற்சி பெற்று, தீனபந்து சி. எவ். அண்ட்றூஸ் அவர்களின் சிஷ்யனாய்ப் பல வருடம் பயின்று, காந்திஜியின் சேவாக்கிராமத்தில் 25 வருட காலமாக வார்தாக் கல்வியென்று கூறப்படும் ஆதாரக் கல்வியின் வளர்ச்சிக்காக உழைதத பெரிய தியாகி எனக் குறிப்பிட்டார். தேசீயக் கல்வியின் பொருட்டு உழைத்த பல பெரியார்களுள் முக்கியபங்கெடுத்துக்கொண்ட இவர், சிறிது காலம் திருவனந்தபுரத்திலே மந்திரி பீடத்தில் அமர்ந்து அரசியல் விவகாரத்தில் ஈடுபட்டுத் தமது தாய்நாட்டுக்கு வேண்டிய சேவை புரிந்தார் எனவும் எடுத்துக்காட்டினர்.

ஆதாரக் கல்வி முறைப்படி, முதலாம் வருடத்தில் ஒரு வகுப்பும், பின் அடுத்த வருடத்தில் இரண்டாம் வகுப்பும் இப்படியாக ஏழு வருடகால எல்லையுள் அப் பாடசாலையிற் சகல வகுப்புக்களும் வர்தாத் திட்டப்படி நடாத்தப்படுமெனத் தாங்கள் புதிதாக ஆரம்பிக்கும் பாடசாலையின் திட்டத்தையும் இவர் விளக்கிப் பேசினார். இத் திட்டத்தின்படி மாணவர்களைப் பயிற்றி எஸ். எஸ். ஸி. போன்ற மேற் பரீட்சைகளில் மாணவர்களைத் தோற்றவைதற்கு ஏற்ற ஏற்பாடுகளும் கல்விப் பகுதியாரின் ஆதரவோடு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீ க. கனகரத்தினம் அவர்கள் தமது தலைமை உரையில் வர்தாக் கல்வித் திட்டத்தின் சில சிறப்புக்களையும், அதனால் இலங்கை மக்கள் அடையவிருக்கும் பேறுகளையும் விளக்கிப் பேசினார். இலங்கை சுதந்திரம் அடைந்தும் அந்நியரின் ஆட்சியிலிருந்த அடிமைப்படுத்தும் கல்வித்திட்டத்தையே ஆதரித்து நிற்பதாகவும், இலங்கைக்கு இப்போது அவசியம் வேண்டப்படுவது வர்தாக் கல்விமுறை போன்ற ஆதாரக் கல்வியே எனவும், இத் திட்டத்தை அரசாங்கம் ஆதரிக்கப்போவதாகவும், கல்விப் பகுதியினர் இம் முயற்சிக்கு வேண்டிய ஒத்தாசை புரிவார்கள் என்றும் உறுதிமொழி கூறினர்.

பின்னர் ஸ்ரீ ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வர்தாக் கல்விப் பாடசாலையைத் திறந்து வைத்து வர்தாக் கல்வித்திட்டத்தைப்பற்றிச் சுருக்கமாக யாவரும் எளிதில் விளங்கிக்கொள்ளக் கூடிய முறையிற் பேசினர்.

அவர் கூறியதின் சாராம்சம்:

'இந்த ஆதாரக் கல்வி இயக்கத்தை ஒரு பெரிய இயக்கமாகவும் ஆக்கலாம். அல்லது ஒரு சிறிய இயக்கமாகவும் ஆக்கலாம். இது உங்களிலேயே தங்கியிருக்கின்றது. எனது மாபெருங் குருவாகிய காந்திஜியை அவர்கள் கொலை செய்யப்படுவதற்கு 3 வாரத்திற்கு முன்னதாக, நான் கடைசியாகப் புதிய டில்லியில் சந்தித்தபோது, இந்த ஆதாரக் கல்வி சம்பந்தமாகவே அவர் பேசிக்கொண்டிருந்தார்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

# பல்கலைக் கழகப் பிரவேசம்

## மாணவர் மன மாற்றங்கள்

சமீபத்தில் நடந்தேறிய இலங்கைப் பல்கலைக் கழகப் பிரவேசப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை நோக்குமிடத்துக் கல்வி விஷயத்தில் மாணவர் மனஞ் செல்லும் முறையை ஒருவாறு யூகித்து அறியலாம். இதுவரையும் நடந்தேறிய பரீட்சைகட்கும் இப்போது நடந்தேறிய பரீட்சைகட்குமிடையிலுள்ள பல வேறுபாடுகளைக் காணலாம்.

இதுவரையும் இலக்கியங்கள் விஞ்ஞானங்கள் என்பன கற்கும் மாணவர்கள் தொகையே அதிகமாகவிருந்தது. இப்போது இத் துறைகளை நாடுவோர் தொகை மிகவும் அருகிச் செல்கின்றது. வைத்தியங் கற்க முன்வரும் மாணவர் தொகை பன்மடங்கு அதிகரிக்கின்றது. இவ் வருடம் பிரவேசப் பரீட்சைக்குச்சென்றோர் தொகை 1565. அவருள் சித்தியடைந்தோர் தொகை 397. இவ்வாறு சித்தியடைந்தோரில் நாற்றுக்கு இருபத்தைந்து வீதம் பெண்கள் என்பது நோக்கப்படவேண்டியது.

யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகளிலிருந்து மேற்படி பரீட்சைகட்குச்சென்றோர் அடைந்தசித்தி விசேஷமாகக் குறிப்பிடவேண்டியது. கொழும்புக் கல்லூரிகளின் சித்திக்கு யாழ்ப்பாணக் கல்லூரிகளின் சித்தி எவ்விதத்திலும் குறைந்ததாயில்லை. கொழும்புக் கல்லூரிகளிலிருந்து 210 மாணவர்கள் சித்தியடைந்தனர். பிறவிடங்களிலிருந்து சித்தியடைந்தோருள் 60 பேர் யாழ்ப்பாணத்துக் கல்லூரிகளிலிருந்து பரீட்சைக்குச் சென்றவராவர். தாமாகக் கற்றுச் சித்தியெய்தினோர் தொகை 72 பேராகும்.

யாழ்ப்பாணத்தில் அநேக உயர்தரக் கல்லூரிகள் சிறந்த முறையில் நடத்தப்படுவதாகவும், அநேக மாணவர் கல்வியின் பொருட்டு அதிக செலவைநோக்காது கொழும்பு நகரை நாடிச் செல்கின்றனர். மற்றைய வசதிக் குறைவுகளும் கொழும்பில் அதிக

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

# பெயர் பெற்ற தமிழன்

## வடி சாராயம் — உஷார்!




**18-3-49**

**சந்தர்ப்பங்களுக்குத் தக்க மாதிரிச் சிலர் நடந்துகொள்ளுவதால், அவர்கள் என்றுமே பெயரும் புகழும் பெற்றுவருகின்றனர். ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் அரசியல் வாழ்க்கை இதைப் பளிங்குபோல் எடுத்துக் காட்டுகின்றது.**

சமபலப் பிரதியாகத் தோன்றிச் சிறுபான்மைச் சமூகத்தினருக்கு ஆதரவு தேடிய காலத்தில் அவரை வெற்றி வீரனென முஸ்லீங்களும் போற்றினர். கடந்த பொதுத் தேர்தலில் அவர் யாழ்ப்பாணத்தின் முடிசூடா மன்னனாக விளங்கினார். பின்னர் மந்திரிப்பதவி பெற்றுத் தமிழ் மக்கள் வெறுத்துத் தள்ளிய யூ. என். பி.க் கட்சியினரின் அன்புக்கும் இருப்பிடமானார். துரோகிகள் என்று சொல்லப்பட்ட ஒரு சில தமிழர்கள், யூ. என். பி. கட்சியை விட்டு விலகிக்கொண்டபோதிலும், இன்று யூ. என். பி. மந்திரிசபையின் மாபெருந் தலைவர்களில் ஒருவராக மதிக்கப்படும் மந்திரி பொன்னம்பலம் அவர்களுக்கே, பிரதிநிதிகள் சபையில் முதன் முதலாகத் தமிழிற் பேசும் பாக்கியமும் கிடைத்துள்ளது.

ஏற்கனவே பிரதமர் சேனநாயகாவின் மந்திரிசபையில் இடம்பெற்ற—மந்திரி சிற்றம்பலம் அவர்களுக்குக் கூடப் பிரதிநிதிகள் சபையில் முதலாவது தமிழ்ப் பேச்சைப் பேசக் கொடுத்து வைக்கவில்லை!

### தமிழ்ப் பேச்சு

இப்போது பிரதிநிதிகள் சபையிலே தமிழிற் பேசுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காகத் தமிழ்மொழிச் சுருக்கெழுத்தாளர் மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, புதன்கிழமையன்று மந்திரி பொன்னம்பலம் அவர்கள் 7 நிமிஷ நேரம் தமிழிலே பேசித் தமது கௌரவத்தை உயர்த்திக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் அரசாங்கம் ஒரு 'சிகரெட்' தொழிற்சாலை ஒன்றை நிறுவவேண்டுமெனச் சாவகச்சேரிப் பிரதிநிதி ஸ்ரீ வி. குமாரசுவாமி சமர்ப்பித்த பிரேரணைக்குப் பதில் கூறுவதற்கு மீன்பிடி ஆராய்ச்சிப்பகுதி மந்திரி பொன்னம்பலம் எழுந்தபோதுதான் அவர் தமது தாய்மொழியாகிய தமிழிற் பேசினார்.

### சபை உற்சாகம்!

அன்று சபைத்தலைவர் ஸ்ரீ ஏ. எவ். மொலமூரே அவர்கள் கூடத் தமிழ்மொழியைக் கேட்டு இரசிப்பதற்குத் தமது சிங்காசனத்தில் உற்சாகமாக வீற்றிருந்தார். தமக்கும் விளங்கக்கூடிய [illegible] பிற் பேசும்படி [illegible] ஏற்கனவே கேட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. சபையிலுள்ள அங்கத்தவர்களும், கலரியில் உள்ளவர்களில் அநேகரும் ஸ்ரீ பொன்னம்பலம் இருந்த பக்கத்தையே ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.

மந்திரி பொன்னம்பலம் எழுந்து சபைத் தலைவருக்குத் துதிகூறியபின்னர், அவர் பேசியதின் சாரம் வருமாறு: ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்மொழி பேசப்பட்டு வருகின்றது. தமிழ்மொழி எவ்வளவோ காலமாக அரசாங்க பாஷையாகவும் இருந்து வந்தது. சில நூற்றாண்டுகாலம் தமிழ்ப் பாஷை அரசாங்க பாஷையாக இருக்கவில்லை....... தமிழ்த் தெரியாதவர்களும் இச்சபையில் உளர். அவர்களும் அதை விளங்கிக் கொள்வதற்குச் சபைத் தலைவர் ஒழுங்கு செய்துவைப்பாரெனநம்புகின்றேன்

இந்தத் தருணம் பார்த்துத்தான் "கேளுங்கள்! கேளுங்கள்!!" என்று உஷார்ப்படுத்தினார் பழைய மந்திரி சுந்தரலிங்கம்.

யாழ்ப்பாணத்திற் 'சிகரெட்' தொழிற்சாலையை நிறுவுவது சிலர் நினைப்பதுபோல அவ்வளவு இலேசான காரியமல்லவென்று சொல்லி ஸ்ரீ பொன்னம்பலம் தமது பேச்சை முடித்துக்கொண்டார்.

### சுருட்டும் சாராயமும்

ஸ்ரீ சுந்தரலிங்கம் எழுந்து பேசும்போது, உரும்பராய்ச் சுருட்டுகளின் மகத்துவத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்.

உடனே சபைத் தலைவர், உரும்பராய் வடிசாராயமும் மிகச் சிறந்ததெனத் தெரிவித்தார். சபைத்தலைவரின் வார்த்தைகள் சபையில் மிகுந்த குதூகலத்தை யூட்டியபடியால அனைவரும் வயிறு குலுங்கச் சிரித்தனர்.

என்றாலும் ஸ்ரீ சுந்தரலிங்கம் சபைத் தலைவர் கூறியதைக் கேட்டுச் சும்மா இருக்கவில்லை. "ஆமாம், உரும்பராய் வடிகட்டிய சாராயந்தான் உங்களுக்கு உஷாரும் உற்சாகமும் ஊட்டும் சக்தி வாய்ந்தது" எனச் சுடச்சுடப் பதில் கொடுத்தார்.

ஸ்ரீ குமாரசுவாமியின் பிரேரணையும் சபையில் நிறைவேறியது.

### விளம்பரங்கள்

ஸ்ரீ சேனநாயகாவின் சாதகபலனோ, அன்றேல் இலங்கையின் பொல்லாத காலமோ அவர் கைவைக்குங் காரியமனைத்தும் சபையிற் படுதோல்வியடைந்து விடுகின்றன.

அரசாங்க விளம்பரங்களுக்கென, சிங்களம், தமிழ் ஆங்கிலமாகிய, மூன்று பாஷைகளிலும் ஒரு பிரசுரம் வெளி

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ.............ர் வதந்தி



● கொண்டோடி ●

● நாடகமே உலகமாம்
☼ இலங்கையிலும் பல நாடகங்கள் நடைபெறுகின்றனவாம்.
☼ இலங்கையில் நாடகம் பற்றி ஒரு பேராசிரியர் சொற்பொழிவாற்றினராம்.
☼ தேசிய நாடகக்கொட்டகை அரசியல் வாதிகள் கையிற் சிக்கலாமாம்.
☼ சிக்கினல் நாடகம் பிரசாரக்கருவியாக மாறிவிடுமாம்.
● காரைக்காலம்மையார் நாடகத்தை யாழ்ப்பாணத்தில் நடித்தார்களாம்.
☼ யாழ்ப்பாணம் சைவமகளிர் கல்லூரி மாணவிகள் தான் நடித்தார்களாம்.
● காரைக்காலுக்கும்கரையூருக்கும் வெகு தூரமாம்.
☼ கரையூருக்குக் குழாய் மூலம் தண்ணீர் கொடுப்பார்களாம்.
☼ திருநெல்வேலி அரசாங்க விவசாயப் பண்ணைக்கு அணித்தாக ஒரு கிணறு தோண்டியிருக்கிறார்களாம்.
☼ அங்கிருந்துதான் தண்ணீர் கொடுப்பார்களாம்.
● சில இந்தியர் தண்ணீர் படாதபாடு படுகிறார்களாம்.
☼ இதைக் குறித்து திரு. இராகவாச்சாரியும் ஏதோ சொன்னாராம்.
☼ இலங்கையில் ஒரு காலையும் இந்தியாவில் மற்றொரு காலையும் வைக்க வேண்டாமாம்.
☼ இந்தியர்களாகவே இருத்தல் நலமாம்.
● நாமும் இலங்கையர்களாகவே இருத்தல் நலமென்று நம்மவர்கள் பேசுகிறார்களாம்.
☼ இலங்கையை சென்னை, மைசூர் பின்பற்றுமாம்.
☼ சமூகவிருத்தி வேலைகளை நம் அரசினர் கவனித்து வருகிறார்களாம்.
☼ இலங்கையை முன்மாதிரியாகக் கொண்டு சென்னையும் மைசூரும் வேலைகளைக் கவனித்து வரலாமாம்.
● கால்நடை வேலையும் நடைபெறுகிறதாம்.
☼ பொல்லனறுவையிலுள்ள வளர்ப்புப் பண்ணைக்கு திரு. டட்லி சேனநாயகா விஜயம் செய்தாராம்.
☼ திரு. டட்லியைப் பார்ப்பதற்கு 2000 கால் நடைகள் அணிவகுத்து நின்றனவாம்.
☼ இந்தக் காட்சியைப் பார்க்காது விட்டோமென்று பலர் துக்கப்படுகிறார்களாம்.
● யாழ்ப்பாணம் முனிசிப்பல் தொழிலாளர்களும் துக்கப்படுகிறார்களாம்.
☼ ஏழு கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கிறார்களாம்.
☼ தற்காலிகத் தொழிலாளரை நிரந்தரமாக்க வேண்டுமாம்.
☼ வேலை நேரத்தைக் குறைக்க வேண்டுமாம்.
☼ அல்லது சம்பளத்தை உயர்த்த வேண்டுமாம்.
☼ சாக்கடை கழுவுவதற்கு இன்று 5 தொழிலாளர்களைச் சேர்க்கவேண்டுமாம்.
☼ வீதிகளைப் பெருக்குங் கோஷ்டியில் இன்னும் இரண்டு பேரைச் சேர்க்க வேண்டுமாம்.
☼ 'லொறி' வேலைக்கும் இன்னும் இருவர் வேண்டுமாம்.
☼ விளக்குமாறு முதலியவற்றை முனிசிப்பலே கொடுக்கவேண்டுமாம்.
☼ நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகை ஒரே ரீதியில் கொடுக்கப்பட வேண்டுமாம்.
☼ 10 வருஷம் நிரந்தரத் தொழில் புரிந்த திரு. வேலன் கதிரனை விலக்கியதை ரத்துச்செய்யவேண்டுமாம்.
☼ திருப்பியும் வேலையில் அமர்த்தவேண்டுமாம்.
☼ 'யூனியனு'டன் கலந்துதான் ஆட்களை எடுப்பதுவும் விலக்குவதும் செய்ய வேண்டுமாம்.
☼ புதிதாக அமைந்த முனிசிப்பலுக்கு இவ்வளவு வேலையும் இவ்வளவு கஷ்டமாக இருக்கவேண்டுமாம்.
● பாராளுமன்ற அங்கத்தவராதற்குக் கஷ்டநஷ்டப்பட்டாலும் பரவாயில்லையாம்.
☼ இவர்களுக்கு அதிஷ்டம் தானகவே கூடிக்கொண்டு வருகின்றதாம்.
☼ கூடிவாழ்க்கை நடத்தும் இவர்களின் மனைவிமாருக்கும் அதிஷ்டம் பிறக்கின்றதாம்.
☼ அங்கத்தவர்களின் மனைவிமக்களும் 'சிறுவஸ்தி'யில் தங்கலாமாம்.
☼ திரு மொலமுரேதான் இதை எல்லா அங்கத்தவர்களுக்கும் சொல்லிவைத்தாராம.
☼ 'சிறுவஸ்தி'என்பது பாராளுமன்ற அங்கத்தவர் கொழும்பில் தங்கும் ஒரு விடுதிச் சாலையாம்.
● பிரதிநிதிகள் சபையில் முக்கிய சம்பவம் ஒன்றும் பிறந்திருக்கிறதாம்.
☼ என்னவென்று அறியப் பலர் ஆசைப் பட்டார்களாம்.
☼ மந்திரி ஜி. ஜி. பி. தமிழிற் பிரசங்கம் செய்தாராம்.
☼ அவர் தமிழ்க் காங்கிரஸ் காரர்தானும்.
☼ தமிழை வளர்க்க வந்தவர் தமிழில் அளந்தாலென்னவாம்.
● எதைச் செய்தாலும் அளவு கணக்காக இருத்தல் வேண்டுமாம்.
☼ வடபகுதித் தபால் நிலைய அங்கத்தவர்கள் கூட்டம் கூடினார்களாம்.
☼ மந்திரி சிற்றம்பலத்திற்கு ஒரு விருந்து அளித்தார்களாம்.
☼ இதற்குத் திருச்சிற்றம்பலத்தின் சகோதரர் திருப்பொன்னம்பலம் ஏதோ ஏதோ கூறினாராம்.
☼ திருப்பொன்னம்பலம், ஜி. ஜி. பொன்னம்பலமல்லவாம்.
☼ மனச்சாட்சியின் படி ... மைகளை மந்திரி ... முடியாதாம்.

சிறந்தபலனுக்கு C. C. C. புகையிலைப்பசளை

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும் போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

C. C. C.

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி லிமிற்றெட்

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றியவிபரங்களுக்கு உடனே எழுதவும்.

The Colombo Commercial Company LIMITED.

INCORPORATED IN GREAT BRITAIN LIABILITY OF MEMBERS Ltd.

(3020)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிநேகம் செய்தல்

**நண்பர்களைத் தேடுவதும் அவர்களுடன் தொடர்ந்து நட்பு வைத்தலும் மிகக் கஷ்டமான ஒரு கலையாகும். நட்புப்பற்றித் திருவள்ளுவர் எவ்வளவோ அருமையான விஷயங்களைக் கூறியிருக்கின்றார். அப்படியிருந்தும், சென்னை ஹிந்துப் பத்திரிகையில் வெளியாகியுள்ள கட்டுரையானது சாதாரண மக்களும் படித்துப் பயன்படும் வகையில் எழுதப்பட்டிருக்கின்றது. இதன் ஆசிரியர் அகநூலில் வல்லுநராவார். ப-ர்.**

**பள்ளிக்கூட மாணவர்கள்,** நண்பர்களைத் தேடிப்பிடித்து அவர்களுடன் சந்தோஷமாகக் காலங்கழிப்பது மகா கஷ்டமான விஷயமெனத் தெரிவிக்கின்றனர். நட்புரிமை பாராட்டிக் கொள்ளுவதற்குச் சாஸ்திரவிதியான முறைகளைக் கைக் கொள்ளாது, பொது அறிவுக்கு உகந்த சில அடிப்படையான தத்துவங்களை அறிந்து கொண்டால் யாவும் இலேசாகிவிடுகின்றன. இணக்கமான ஒருவரைத் தேடிப் பிடிப்பது ஒருகாரியம். அப்படி அகப்பட்டவருடன் தொடர்ந்து நட்புரிமை பூண்டு வருவது வேறொருகாரியம். பொதுவாக நாங்கள் எத்தனையோ விதமானவர்களுக்கிடையே நடமாடித் திரிகின்றோம். இத்தகைய கூட்டங்களிற் சிநேகிதர்களாகக் கூடியவர்களும் வந்து சந்திக்கக் கூடும். இப்படி அகப்படும் அன்பர்கள் வாழ் நாள் முழுவதும் இணைபிரியா நண்பர்களாக அமைந்து விடுவார்களாயின் அது பெறற்கரிய பெரும் பேறாகி விடுகின்றது.

### சில விதிகள்

நண்பர்களைத் தேடி அவர்களுடன் தொடர்பு பூண்டு ஒழுகுவதற்கான சில விதிகளை இங்கு கவனிப்போம். ஒருவரிடத்தே உமக்கு உண்மையாகவே அபிமானம் இருக்க வேண்டும். அவர் சீருஞ் சிறப்புமாக வாழ்ந்தால், அதனால் நீரும் பயனடையலாம் என்று ஓர் எண்ணம் இருத்தல் அவசியமாகும். இதற்காக அவரை ஆதரித்து உபகாரம் செய்வது போல நடந்து கொள்ளுவனதத் தவிர்க்க வேண்டும். அப்படியில்லையென்று அத்தகைய தொடர்பு ஏற்பட வேண்டிய நிர்ப்பந்தம் உண்டானாலுங் கூட மற்றவர் அதை விரும்பமாட்டார். எனவே, இருவருக்கு மிடையே என்றோ ஒரு நாள் 'தெறிப்பு' ஏறபட்டே தீரும். நீர் எந்த விதத்திலும் மிக உயர்ந்தவர் என்று நடந்து கொள்ளவே கூடாது. உம்முடன் ஒருவர் நண்பனாகஇருப்பதன்நிமித்தம் அவர்ஏதோ நன்மைகள்பெற்று வருகின்றார் என்ற எண்ணம் கனவிலும் இருக்கக் கூடாது.

### பாராட்டுதல்

மற்றவர் உம்மிலும் பார்க்கக் குறைந்தவர்என நினைத்துக் கொள்ளும் வகையில் நடந்து கொள்வது சிநேகிதத்துக்குப் பங்கம் விளைத்து விடும். இத்தகைய சந்தர்ப்பங்களுக்கிடையே உண்மையான நட்பைப் பெற்றுக் கொள்ளுவது இயலாத காரியம். ஒருவரைப் புகழும் விஷயத்திற் பின்நிற்கக் கூடாது. அத்துடன் தாராளமாக அவரைப் பாராட்டவும் வேண்டும். இத்தனைக்கும் அவ்வளவு பாராட்டுதல்களும் உண்மையான அபிமானத்தின் பேரால் உள்ளத்திலிருந்து வெளிவரல் வேண்டும். வெறும் புகழ்ச்சியாக மாத்திரம் இருத்தல் கூடாது. சில சமயங்களில் நண்பனைப் பாராட்ட வேண்டிய ஓர் உரிமை எழக் கூடும். அவரும் அதற்கு உரிமை பூண்டவராகவே இருப்பார். நண்பரை நேருக்கு நேர் மெச்சும்போது அது கள்ளங்கபட மற்ற முறையில் அமைந்து விடுவதே மெச்சத் தக்கது. குற்றங்குறை காண்பதை அறவே ஒழித்துவிடுக. நோக்கம் நன்றாகத்தான் இருந்த விடத்தும் குற்றங் கூறுவதை உலகில் எவருமே விரும்புவதில்லை.

### பரஸ்பர அன்பு

எப்படியிருந்தபோதிலும் குற்றங்காண்பது ஒருபோதுமே விரும்பத் தக்கதன்று. ஏனெனில், இதனால் எவ்வித நன்மையுமே உண்டாகுவதில்லை. உண்மையாகவே ஒருவரைத் திருத்திவைக்கவேண்டிய சந்தர்ப்பம் உண்டாகுமாயின் அவர் அதைத் தாமே உணர்ந்து திருந்தி நடந்து கொள்ளத்தக்க வகையில் மற்றவர் அதை எடுத்துக் காட்ட வேண்டும். இருவருக்கும் பொதுவான ஒரு விஷயத்தில் நாட்டம் ஏற்படுமாயின் அது காரணமாகப் பரஸ்பர அன்பு நிலவுவது சாத்தியமாகும். மற்றவர்கள்மீது உமக்கு அனுதாபம் உண்டென்பதை அவர் அறிந்துகொள்ளத்தக்க முறையில் நடந்துகொள்ள வேண்டும். எதிலும் விருப்பு வெறுப்பற்ற மாதிரி, பிறர்விஷயந்தானே என்று சொல்லி அன்பர்களின் காரியங்களில் வழவழப்பாக இருத்தல் அபாயமானது. நண்பரின் மகிழ்ச்சி தனது மகிழ்ச்சியெனக்கருத வேண்டும்.

### சகிப்புத்தன்மை

அத்துடன் ஒவ்வொருவரின் தனிப் பண்புகளைக் கவனித்து அவற்றுக்கேற்பச் சமாளித்துக்கொள்வதே விரும்பத்தக்கது. இதுவிஷயத்தில் இருபகுதியினரிடமும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் பொறுமையும் சகிப்புத்தன்மையும் அத்தியாவசியமானவை. நட்புரிமை பாராட்டுவதற்காகவே நண்பர்களாக இருந்துகொள்ளவேண்டும். இது காரணம்பற்றி இடையிடையே உதவி பெறுவது தவறெனக் கருதவேண்டியதில்லை. ஆனாற் சுயநலமே அடிப்படையாக இருக்குமாயின் அது வெறுக்கத்தக்கதாகும். நண்பர்களிடமிருந்து பொருளுதவியையோ, வேறு எவ்விதமான உதவியையோ எதிர்பார்க்கவே கூடாது. அதனுடன் ஒழுக்கமும் நற்குணம் வாய்ந்தவர்களாக இருந்து கொள்ளவேண்டும் வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோள்கள் இருத்தல் அவசியம். இதன் பேறாக நல்ல நண்பர்கள் வந்து அகப்படக்கூடும். ஒன்றிலுமே, அக்கறையில்லாமல் வாய்ச் சம்[illegible]திற் காலங் கழிக்க விரும்புவோர்க்கு வாழ்க்கையில் நல்ல நண்பர்கள் கிடைக்கவேமாட்டார்கள். அப்படியில்லையெனில் இவர்களுக்கு ஒருசில நண்பர்கள் கிடைத்தாலும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் நிலைத்து நிற்கவேமாட்டார்கள். இவர்களில் ஒருசிலர் நற்குண நற்செய்கைகளில் ஈடுபாடற்றவர்களாகவே காணப்படுவார்கள்.

### மூன்று எச்சரிக்கைகள்

இதுவரை கூறப்பட்ட விதிகளைவிட, உளநூலின்படி மூன்றுவித எச்சரிக்கைகளை இங்கு கூறுவது மிகவும் பொருத்தமானது. **முதலாவதாக:** உமக்கு உண்மையாகவே நண்பர்களுடன் காலங் கழிக்கும் உணர்ச்சி அதிகமாக இருக்கின்றதோ என்பதை அறிந்துகொள்ளவேண்டும். உமது குழந்தைப் பருவமானது மகிழ்ச்சிக்குரியதொன்றாக இருக்காதவிடத்து இந்த உணர்ச்சி ஏற்படக் கூடும். இல்லாதுபோனால் அன்புக்குரித்தான தேவைகள் உமக்கு இயற்கையாகப் பூரணமாகக் கிடையாதிருக்கக்கூடும். இப்படியானவர்கள் நண்பர்களுக்குப் பெரிய பாரமாகவேயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களின் தொல்லையைப் பொறுக்க முடியாதவர்களாய் அவர்களை விட்டு அகன்றுவிடவே முயலுவார்கள். **இரண்டாவதாக:** உமது நட்பு "சேர்க்கை"யினபாற் பட்டதாக இருத்தல் கூடாது. **மூன்றுவதாக:** அன்பர்களைத் தேடிக் கண்டுகொள்ளும் பண்பு சுயேச்சையாக அரும்ப வேண்டும். வலுவுக்குத் தேடிப் பிடித்து நட்புரிமை கொள்ளுவது ஏற்புடைத்தன்று.

# ஏழையை இகழ்ந்தது போதும்

— மு. கோவிந்தசாமி —

பல்லவி

ஏழையைப் பற்றிநீர் இனிப்பேசாதீர்

அனுபல்லவி

ஏழையின் நன்மை எந்நலமென்றே<br>
கோழைத் தனமாய்க் கூச்சலிடாதீர்

சரணம்

உலக முழுவதும் தன்னலக் கட்சி<br>
பலபல, ஏழையை படியெனப் பற்றிச்<br>
சிலபல பதவி தலைமை யுயர்ந்ததும்<br>
எலியென ஏழையை இகழ்ந்தது போதும்

# பரமஹம்சர் சமரசம்

## ஞானப்பாலூட்டிய குரு



**ஸ்ரீ** இராமகிருஷ்ண பரமஹம்சர் இதுவரை இந்தியாவிலே தோன்றிய ஞானச்சுடர்கள் அனைத்தும் ஒருங்கே உருவெடுத்தாற்போன்ற ஞான சூரியன், ஒரு கரத்தால் இறைவனையும் மற்றொரு கரத்தால் உலக மக்களையுந் தழுவித் தனக்காக வாழாது பிறர்க்கென வாழ்ந்த அருட் சோதி.

அவர் தமது வாழ்க்கையில்விளக்கிக் காட்டிய பேருண்மைகள் மூன்றாகும். பரம்பொருள் உருவமாயினும் அருவமாயினும், உருவ அருவங்களைத் தாண்டி நிற்பினும் ஒன்றேயாகும் என்பது முதலாவது. எல்லா மதங்களும் மெய்ப்பொருளை அடைதற்குத் தனித்தனி வழிகளாகும் என்பது இரண்டாவது. பரம்பொருளை எய்துதற்குத் துறவினும் வேறுய சிறந்த வழியில்லை என்பது மூன்றாவது. இம் மூன்றும் சர்வ சமய சமரசக்கொள்கைக்கு அடிப்படையாகி உலகம் முழுவதையுமே ஒன்றாகப் பிணைக்கும் பெருஞ் சக்தியை உண்டாக்கிக்கொண்டிருக்கின்றன. இன்று சாஸ்திர ஆராய்ச்சியின் பெருக்கத்தால் உலக எல்லைகள் சுருங்கி வருகின்றன. எந்த விஷயத்தைப் பேசினாலும் உலகத்தையே ஆதாரமாகக் கொண்டு பேசுகின்றோம். யுத்தம் சம்பவித்தால் அது உடனே உலக யுத்தமாக மாறுகின்றது. சமாதானப் பேச்சு எழுந்தால் உலகம் முழுவதற்குமே சமாதானப் பேச்சு நிகழுகின்றது. அகில உலகுக்கும் பொதுவான ஒரு அரசாங்கம் ஏற்படுத்துவதுகூட இன்று கடினமாகத் தோன்றவில்லை. இந்நிலையில் மனிதன் தன்னை உலகப் பிரசையாகக் கருதவும் சகோதர மனப்பான்மை தளிர்விட்டுச் செழித்தோங்கவும் வேண்டுமாயிருந்தால் அவன் சர்வ சமய சமரச நிலையை அடிப்படையாகக்கொண்டே புதியதோர் நாகரிகத்தைத் தோற்றுவிக்க வேண்டும். அந் நாகரிகம் தவிர்ந்த வேறு எந்த நாகரிகமும் நெடுநாள் நிலைத்திருக்குமென்று நாம் நிச்சயமாகக் கூற முடியாது. சமரச சன்மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்ட இத்தகைத்தாய ஒரு பெரு [illegible] மகான் ஸ்ரீ இராமகிருஷ்ணர். கீழ்நாட்டு மேதாவிகள் உட்பட மேல்நாட்டு அறிஞர்களும் நூல் ஆசிரியர்களும், செல்வமும் கல்வி அறிவும் நவ நாகரிகத்துக்கு அடையாளமான அம்சம் எதுவும்

— செ. தனபாலசிங்கன் —

இல்லாமல் அமைதியாக வாழ்ந்த கோயிற் பூசாரி ஒருவரின் ஞான வாழ்க்கையையும் அவரின் பொன்மொழிகளையும் போற்றிப் புகழ்ந்தனர் என்றால் அவரின் சீருஞ் சிறப்புக்கும் வேறெவ்வித எடுத்துக்காட்டும் தேவையேயில்லை.

### கற்பனைக்கு அப்பால்

இராமகிருஷ்ணரது வாழ்வு எம்மவரின் கற்பனைக்கு எட்டாதது. பால் பற்றிய நினைவு, அதாவது பெண்களை இச்சிக்கும் ஆசை அவரிடம் எழவில்லை. பொறிவாயில் ஐந்தவித்தானே துறவியெனனும் முதுமொழிக்கு அவர் வாழ்வு விரிவுரையாயிற்று. மாதரனைவரையும் அகிலாண்டேஸ்வரியின் ஆனந்த சொரூபமே எனக் கண்டார். கடவுட் பித்தேறிய அவரது தூய உள்ளத்தை அறியாத சுற்றத்தாரும் பிறரும் அவரைப் பித்தனென்றே எண்ணினர். பித்தந் தெளிய மருந்து தேடினர். அவரை ஐம்புல உலக இன்பத்தில் மூழ்கவைத்தால் சரியான நிலைக்கு வந்துவிடுவார் என்று எண்ணினார்கள் உண்மையறியாப் பேதையர். பால்ய விவாகம் குலாசாரப்படி நடந்திருந்தமையின் அன்னை சாரதாதேவியை அவரிடம் போகும்படி தூண்டினர். அன்னையைக் கண்டார்; அடிபணிந்தார்; உலகையாளும் பராசக்தியின் ஆனந்த சுரூபத்தையே அங்கு கண்டார். பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் அன்னை சாரதாதேவியின் வாழ்வு வளம் பெறுவதற்கு அவசியமான அத்தனையும் போதித்தவுடன் அமையாது ஆன்ம ஈடேற்றம் கருதி ஒருவன் தன்னை எவ்வாறு ஒறுக்கவேண்டுமென்றும், எவ்வாறு தன்னை ஒப்படைக்க வேண்டுமென்றும் தெள்ளிதில் விளக்கினார். ஸ்ரீ இராமகிருஷ்ணர் எவ்வாறு அன்னையாரை அன்பொழுக ஆதரவாக நடத்தினாரோ அவ்வாறே இன்றைய உலகம பெண்களைப்பேணி வாழ்ந்தால் சமூகத்திலிருக்கும் குறைகளுக்குப் பெண்களே காரணமாவாரென்ற தப்பபிப்பிராயம் எங்கோ மறைந்தோடிவிடும். இந்துசமயம் கற்புடைமையையும் தூய்மையையும் பிரமச்சரிய வாழ்க்கையையும் புற

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிழக்குத் தபால் — நமது நிருபர்

# பொருட்காட்சிச் சாலை

கடந்த மாசிமாதம் சுதந்திரதின விழாவை எவ்வாறு கொண்டாடுவது என ஆலோசிக்கக் கூடிய சபையில், கிழக்கு மாகாண அதிபர் மட்டக்களப்பில் நமது முன்னோர்களின் பண்டைப் பொருட்களைச் சேர்த்துவைக்க ஒரு காட்சிச்சாலை அவசியம் அமைக்கப்படவேண்டும் எனக் குறிப்பிட்டார். அவருக்கு இவ்வெண்ணம் கொழும்பில் நடந்த **கலைவிழா**வுக்குக் கொண்டுபோகப் பண்டிதர் செ. பூபாலபிள்ளை அவர்கள் சேகரித்த பொருட்களைக் கண்டுதான் ஏற்பட்டதாம். இங்ஙனம் ஒரு காட்சிச் சாலையை அமைக்கவேண்டிய ஏற்பாடுகளைத் தாம் செய்வதாகவும், இப்பகுதி மக்கள் தங்களிடமுள்ள பழங் கலைப் பண்புள்ள பொருட்களைக் காட்சிக்கு வைக்க உதவவேண்டுமெனவும் வேண்டிக்கொண்டார். இப்பகுதிமக்கள் தங்கள் பண்பாட்டைப் பிரதிபலிக்கக்கூடிய ஒரு பொருட்காட்சிச்சாலையைப் பெரிதும் வரவேற்கிறார்கள். ஆனால் இப் பொருட்காட்சிச்சாலை எப்போது? எங்கு கட்டப்படும் என்பதுதான் கேள்வி?

### கதம்பக்கச்சேரி

கொழும்புக் கலைவிழாவை யிட்டு எழுதும்போது இங்கு நடந்த ஒரு 'கலைவிழா' ஞாபகத்துக்கு வருகின்றது. இவ் விழா ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலைக் கட்டிட நிதிக்காக ஏற்பாடு செய்யப்பட்டதாகும். இக் கதம்பக்கச்சேரி பாட்டு, வாத்திய சங்கீதம், நடிப்பு, நடனம் முதலிய பல பகுதிகளைக் கொண்டிருந்தது. பட்டணத்திலுள்ள இளங் கலைஞர்கள் யாவரும் உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொண்டனர். இவற்றுள் செல்வி சந்திராவதி, செல்வி ருத்திராணி ஆகிய இரு குழந்தைகளின் நடனமும், செல்வன் சுப்பிரமணியத்தின் வேணுகானமும் அனைவரின் உள்ளத்தையும் கொள்ளை கொண்டுவிட்டன. இக் கதம்பக்கச்சேரிமூலம் இரண்டாயிரம் ரூபாய்க்குமேல் சேர்ந்துவிட்டது என்றால், கேட்பானேன்.

### கைப்பந்தாட்டப் போட்டி

பல வருஷங்களின் பின் இம்முறை இங்கு இப் போட்டி ஆரம்பமாகியுள்ளது. இப் போட்டியிற் பல சங்கங்கள் பங்கெடுத்துக் கொள்கின்றன. அவற்றுள் விசேஷமாகக் குறிப்பிடப்படவேண்டியது 'காந்திக் கிளப்' ஆகும். இது ஓர் தாழ்த்தப்பட்டவர் (Barbers) களின் ஸ்தாபனமாக இருந்தபோதும் வித்தியாசம் காட்டாது சேர்த்துக் கொள்ளப்பட்டமை பாராட்டுதற்குரியதாகும். **மாமாங்கம்** போன்ற பெரிய தலங்களைத் தாழ்த்தப்பட்டவர்களுக்காகத் திறந்துவிட்ட 'மட்டகளப்பு' இவ் விஷயத்திலும் முந்திக் கொண்டது. டிை 'கிளப்'பினர் **காந்திஜீ வாசிகசாலை** என்ற பெயருடன் ஒரு வாசிகசாலையை நடத்திவருவதும் நமது காதுக்கெட்டுகிறது. வாழ்க சமத்துவம்!

### எண்ணெய் ஆலை

மட்டக்களப்பில் ஏராளமான தென்னந்தோட்டங்களிருந்தும் அது இன்றுவரை தேங்காய் எண்ணெய்க்குக் கொழும்பையே எதிர்பார்த்து நிற்கிறது. இங்குள்ள கொப்பறா வெளியேபோய் எண்ணெயாகி இங்கு திரும்புகின்றது. இதனால் இங்கு எண்ணெய் விலை கூடிவருகின்றது. இத் தொல்லையைப் போக்க ஐக்கிய பகுதி உதவிப் பதவு காரியஸ்தர், கிழக்கு மாகாண அதிபர் தலைமையில் தெங்குப்பொருள் விற்பனை விருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கூட்டி ஆலோசித்தார்கள். இதன் பயனாக 'மட்டக்களப்பு தெங்குப் பொருள் உற்பத்தியாளர் சங்கங்களின் யூனியன்' ஒரு எண்ணெய் ஆலையைத் திறப்பதாக முடிவு செய்துள்ளது. இவ்வுதவிப் பதிவு காரியஸ்தர் ஆரம்பித்து வைத்த **புகையிலை உற்பத்தி விற்பனைச் சங்கம்** மிகத் திறமையாக வேலை செய்து வருவதுபோல இந்த ஆலையும் இப் பகுதிக்குப் பெரு நன்மையளிக்குமென எதிர்பார்ப்பது நூதனமல்ல.

### வீடுகட்டுந் திட்டங்கள்

இலங்கையின் மற்றப் பகுதிகளில் வீட்டுத் தட்டுப்பாடு இருப்பதுபோல் இங்கும் வீட்டுத்தட்டுப்பாடு நிறைய உண்டு. இதனைப்போக்க இரு திட்டங்கள் உருவாகுகின்றன. இவற்றுள் ஒன்று நகரசபையாரின் சேரி ஒழிப்புத்திட்டத்தின்படி வீடு கட்டுதல்; மற்றது ஐக்கியசங்க வீடமைப்புத் திட்டம். இவ் விரு திட்டங்களும் இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஐக்கிய வீடமைப்புச் சங்கம் இலங்கையிலே இரண்டாவதாகும். இவர்கள் வீடு கட்டுவதற்காக 16 ஏக்கர் பூமியும் வாங்கிவிட்டார்கள். இனி இவர்கள் அரசாங்கத்திடமிருந்து கடன் பெறுவதுதான் தாமதம். அரசாங்கம் புதிதாக நிறைவேற்ற இருக்கும் சட்டங்கள் — இவ்வகையிற் பெரிதும் உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இச்சங்க வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவர் அதன் காரியதரிசி திரு. வி. ரீ. ஞானசூரியம் அவர்கள் ஆகும்.

### செங்கல் விலையேற்றம்

இன்று மட்டக்களப்பில் பல கட்டிட வேலைகள் நடைபெறுகின்றன. ஆண்கள் அரசினர் ஆசிரியகலாசாலைக் கட்டிட வேலை துரிதமாக நடைபெறுகிறது. மகளிர் அரசினர் ஆசிரியகலாசாலைக்கு அத்திவாரம் வெட்டுகிறார்கள். புளியந்தீவிலுள்ள வடிகால்களைக் கட்ட ஒப்புக்கொண்ட 'கம்பனி'யார் தங்களுக்கு வேண்டிய பொருட்களைச் சேர்க்கிறார்கள். பகிரங்க வேலைப் பகுதியாருக்கும் அதிகம் கட்டடச்சாமான்கள் தேவைப்படுகின்றன. இதனால் இங்கு செங்கல் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. இதைப் பார்த்துக்கொண்டிருக்கும் கருங்கல்லும் தன் நடப்பைக் காட்ட எத்தனிக்கிறது. மரம், சுண்ணம்பு, நீறு இவைகளும் இவற்றுடன் சேர்ந்து கொண்டால் கேட்க வேண்டியதில்லை.

### திருகோணமலையில் உள்நாட்டுமந்திரி

சென்றவாரம் உள்நாட்டு மந்திரி கனம் ஈ. ஏ. பி. விஜயரத்தின அவர்கள் திருகோணமலைக்கு விஜயம் செய்தார்கள். அவரை வரவேற்க நகரசபைத்தலைவரும், பாராளுமன்ற அங்கத்தினரும், சிலரும் புகைரத நிலையத்திற்கு விரைந்தனர். மந்திரி அவர்கள் வந்ததும் வராததுமாக நகரசபைத் தலைவர் சூட்ட இருந்த மாலையைக் கழுத்தில்—வாங்க மறுத்துக் கையிலேந்திக் கொண்டார். மாலையை மறுத்த மந்திரி விருந்துபசாரங்களை மறுத்து ஒதுக்கிவிடவில்லை. மகிழ்வுடன் கலந்து கொண்டார். மந்திரி தமது நிர்வாகத்தின் கீழுள்ள சிறைச்சாலையையும், கச்சேரியையும் சுற்றிப்பார்த்ததோடு, திரு. எஸ். சிவபாலன் திருகோணமலைக்குக் குழாய் நீர் அவசியமென வற்புறுத்தியபோது அதையும் காதில் வாங்கிக்கொண்டு மீண்டார்.

### தண்ணீர்த் தட்டுப்பாடு

திருகோணமலை, குழாய் நீர் கேட்கிற நேரத்தில் மட்டக்களப்புக் குழாயின் குறும்புத்தனம் ஞாபகத்துக்கு வருகிறது. இம் மாதத்தில இக் குழாய், நாளில் அரைவாசி நேரத்துக்கு வேலைநிறுத்தஞ் செய்துவிடுகிறது. காரணம் இதுவரை நீர் இறைத்த யந்திரங்கள் இரண்டில் ஒன்று பழுதுபட்டுத் திருத்துவதற்காகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டுவிட்டமைதான் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். உண்மைக் காரணம் தெருவிலுள்ள குழாய்களில் இறப்பர் குழாய்களைப் பொருத்தி நீரை உறிஞ்சும் புல்லுருவிகள்தான் என ஸ்ரீமான் பொதுஜனம் சொல்கிறார். இப்புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் அநேகர் பெரிய பதவிகளை வகிக்கின்றனர். இதனைத் தடுக்க நகரசபை உபவிதிகளை ஆக்கி அரசாங்க அங்கீகாரத்திற்கு அனுப்பியிருக்கிறதாம். நிற்க தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க சுகாதார மந்திரி கல்லடியில் 9 கிணறுகள் வெட்டி அங்கிருந்து நகருக்கு நீருதவ இசைந்துள்ளாராம். இத்திட்டம் முற்றுப்பெற்றால் தண்ணீர்ப்பஞ்சத்திற்குப் பஞ்சமேற்பட்டு விடலாம்.

திருத்தம்: சென்ற தபாலில் ந. விஜயநாதன் என்றிருந்ததை பா. விஜயநாதன் எனத் திருத்துக. —ப-ர்.

## ஸ்ரீமதி செனிவிரத்னவுக்குத் திரும்பவும் விசாரணை

### முதலாவது எதிரிக்குத் தண்டனை

கொட்டாஞ்சேனைக் கொலை வழக்கின் இரண்டாவது எதிரியான ஸ்ரீமதி பெட்ரிஸ் மோட்டிஎன். செனிவிரத்னவுக்குக் கொழும்பு அஸைஸ் நீதிஸ்தலத்தில் அளித்த தீர்ப்பைக் கிரிமினல் அப்பீல் நீதிஸ்தலத்தில் நேற்று நீக்கிவிட்டு அவரது வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டுமெனத் தீர்ப்புக் கூறியது. இந்த வழக்கின் முதலாவது எதிரியான கே. ஏ. தர்மசேனவுக்கு நீதிஸ்தலம் அளித்த தீர்ப்பைக் கிரிமினல் அப்பீல் நீதிஸ்தலம் அங்கீகரித்தது. எனவே அஸைஸ்நீதிஸ்தலத்தில் தீர்ப்பை ஆட்சேபித்துத் தர்மசேன செய்துகொண்ட அப்பீலைக் கிரிமினல் அப்பீல் நீதிஸ்தலம் தள்ளுபடி செய்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ் வீசும் பட்டங்கள்

இவ்வாண்டுச் சுதந்திர விழாவின்போது, பொதுமக்கள் வழங்கிய பட்டங்களைச் சரமாரியாகப் பொழிந்துகொட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது.

இலங்கைப் பிரதம மந்திரி அவர்களே இவ்வளவுபட்டங்களுக்கும்உரிமைபூண்டவரானார்.

அவருக்குச் சூட்டப்பெற்ற பட்டங்களாவன:

மக்கள் தெரிந்தெடுத்த மாபெருந் தலைவர்.
தேசத்தின் தந்தை.
கலியுக விஸ்வகர்மா.
ஸ்ரீலங்கா மணிமுடியின் சிரோரத்தினம்
செங்கலாகடத்தின் தலைவர்
கிழைத்தேசங்களின் மகத்தான காவற்காரன்

**கற்பனை உலகில்**

தமது அன்பர்களையும், குணங் குறிகளை ஆராய்பவர்களையும், இம்முறைதான் ஸ்ரீ சேனநாயகா கற்பனை உலகிற் சிறகடித்துப் பறக்கச் செய்யவில்லை. பலவருடகாலமாக அவரை மக்கள் பின்வருமாறுபோற்றிப் புகழ்ந்து வருகின்றனர்.

மகாபராக்கிரமவாகு மன்னனின் அவதார புருஷன். காலகதியில் இவரே தியசேனுவாக விளங்கக் கூடுமெனவும் பலர் சமுசயப்பட்டனர். எங்கள் அனைவருக்கும் அவர் கானகத்து யோவான் எனவே காட்சியளித்து வருகின்றார்.

பட்டங்களைக் கட்டியாளும் விஷயத்தில் ஸ்ரீ சேனநாயகா ஏக சக்கிராதிபத்தியம் வகித்தும் தனிக்காட்டு இராஜாவாகத் திகழ்வதை ஒருபோதும் விரும்பியதேயில்லை. ஆனால், பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள வேறு சிலருக்கு இத்தகைய ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமாயின அவர்கள் செஞ்சொற்களாற் பட்டங்கள் புனைபவர்கள் அத்தனைபேரையும் சித்தப்பிரேமைக்கு ஆளாக்கி யிருந்திருப்பார்கள். ஒரு சிலர் இத்துறையில் இறங்கி அநேகரைக் கலக்கியடித்துவிட்டனர். 'விலை மதிக்கவொண்ணாத முத்தாரம்' எனவும், 'சட்டநூற் களஞ்சியம்' எனவும் ஒருவர் பெயர் வாங்கிக்கொண்டார்.

**முக்கியமானது**

அதிகமாகச் சத்தம் போடும் ஒருவரா, அன்றேல் கண்ணுக்கு, முன் அநேக காரியங்களைச் செய்து முடிப்பவரா, நாட்டின் வளர்ச்சிக்காக உழைக்கின்றார் என்பதே முடிவு கட்டவேண்டிய ஒரு முக்கிய விஷயமாகும். இவர்களை இவ்விருகாரியங்களிலும் பாரபட்சமற்ற வகையில் ஆராய்ந்து பின்வருமாறு போற்றுவோமாக: உலகத்தின் மாந்திரிகன்; கொள்ளைக்காரரைக் குடல்நடுங்கச் செய்பவன்; சுவர்மேல் இருக்கும் பூனை, சண்டியர்கள் தலைவன்.

வேறோர் துறையிற் பின்வருபவர்கள் கீர்த்திபெற்று விளங்குவதைக் காண்கின்றோம்: சொந்தக்காரரின் காவலன், வகுப்புவாதப் பின்னணிச் சங்கீதக் கோஷ்டியின் தலைவர், சமபலப் பிரதிநிதி, கழைக்கூத்தாடி. அடித்தொண்டையிலே தேசியச்சுரம்பாடுபவர் வேலை நிறுத்தம் ஏற்படுத்தும் கர்த்தா, வேலை நிறுத்ததை ஒழிப்பவர்.

**முப்பிரிவு**

பிரதமரின் ஆசனத்துக்கு உரிமைகோரி நிற்பவர்கள் மூன்றுபிரிவினராக விளங்குகின்றனர் இத்தனைக்கும் அரசியல் வளர்ச்சியே காரணமாகும். **ஒன்று:** முடிக்குரியவர். **இரண்டு:** முடிக்கு உத்தேசமானவர் **மூன்று:** முடிக்குரிய வரிசைப்பாசாங்கு செய்பவர்.

இடதுசாரி அரசியலானது நாட்டிலே தலைகாட்டத் தொடங்கியபின்னர், அரசியல் அகராதியிற் புத்தம் புதிய பதங்கள் இடம்பெறலாயின. பந்தம் பிடிப்பவர்கள் (சிங்களத்தில்: பந்தங்காரய,) பஸ்நாயக, ட்ரொஸ்கி சதிகாரர், கொம்யூனிஸ்ட் பணமூடை, இரகசிய ஏகாதிபத்தியத் தாசர் என்பன அவற்றுள் ஒருசில.

## நவீன ஆராய்ச்சி

**கணிக்கும் விதம்**

இதேப் பட்டங்கள் பெறுபவர்களை, வேறுவிதமாகவும் நாங்கள் கணிக்கலாம். அவர் வலப்பக்கமாகத் தென்படுகின்றாரா, அல்லாது இடப்பக்கமாகத் தென்படுகின்றாரா என்பதிற்றான் இது முற்றாகத் தங்கியிருக்கின்றது. ஆகவே அரசாங்கத்தின் அரண், பாஸிஸ்ட் சர்வாதிகாரி, எளியார்க் கன்பன் (தீனபந்து), நாட்டுமக்களின் பிழையான வழிகாட்டி என்ற சொற்றொடர்களும் ஏற்படலாயின.

நற்குண நற்செய்கைமிகுந்த இதே பிரமுகர், தெய்வங்களின் செல்வப் புதல்வன எனவும, ஒழுக்கத்தின் விரோதி யெனவும் வழங்கப்படுவதும் கண்கூடு.

**கனிசம் இல்லை**

தேசபக்தர்கள் ஒரு சிலரின் சேவைகள் போதியளவு கனிசம் பெறுதிருத்தல் உண்மையே யாகும். இது பெரிதும் வருந்தத்தக்கதொன்று. அவர்கள் மீது திணிக்கப்படும் அதியற்புதமான பட்டவரிசை வருமாறு: கொள்ளை இலாப மடிப்பவர்களின்போஷகர், கள்ளச்சந்தையின்மன்னன்; இரகசிய விசாரணைத்தலைவர், அபின் அபிமானி; கொள்ளைக்காரன்.

ஆனால், அவர்கள் செய்து வரும் வேலைகளையும், சேவைகளையும், அவர்களின் தகுதியையும் நாங்கள் முறையாக அறிந்து கொள்வோமாயின் அவர்களை ஆகாயத்திலேதூக்கி வைக்கப் பின் நிற்கமாட்டோம். எவ்வாறெனில்; சமூகத்தின் இரட்சகன், நாகரிகத்தின் சுமைதாங்கி, சமயத்தைக்காப்போன், சட்ட ஒழுங்குகளின் வெற்றி வீரன்என்ற பட்டங்களாற்கௌரவிப்பதே.

**தூண்டுகோல்**

இவ்வளவு பட்டங்களுந்தான் இருப்பதாக் எண்ணவேண்டியதில்லை. இக்குவியலில் இருந்தே சந்தர்ப்பம் ஏற்படும் போது ஏதோ ஒன்றை எடுக்க வேண்டுமென்ற நியதியே இல்லை. விரும்பினால் இந்த அகவரிசையினின்றும உகந்த தொரு சொற்றொடரை எடுத்துக் கொள்ளலாம. ஆனால் எழுச்சி உண்டாகாதவிடத்து சிந்தனை ஊற்றும் தடைப்பட்டு உணர்ச்சி வெள்ளம் அற்றுப்போய் விடுகின்றது. உள்ளமானது சிந்தனை உலகிற் சஞ்சரிக்க வேண்டுமாயின் அது செம்மையான ஒரு நிலையில் இருப்பதுடன் ஒரு தூண்டுகோலும் அவசியமாகும். உதாரணமாக: அஸ்திவாரம் இடுவதற்கென ஓர் இடத்தில் மண்வெட்டியால் வெட்ட வேண்டும்; அஸ்திவாரக்கல் நாட்ட வேண்டும்; கொடியை ஏற்ற வேண்டும். இல்லாதுபோனால் படத்தையாவிலும் திறந்தேயாகவேண்டும்.

> பட்டங்கள் பெறுபவர்களும் அப்பட்டங்கள் புனைபவர்களும் இப்பாரினிலே பலருளர். அவர்களின் பெருமையைச் சீர் வரிசைகளுடன் ஜாக்கஸ் செவ்வனே ஆராய்ந்துள்ளார். இது டைம்ஸ் ஒவ் சிலோன் பத்திரிகையில் வெளியாகியுள்ளது. ப-ர்.

**சிந்தனைக்கு உணவு**

மணங் கமழும் மலர்மாலைகள் விடைபெற்றுச் செல்லுங் காலம் வந்து விட்டது. இது ஒன்றே சிந்தனைக்கு உணவூட்டும் சிறந்த சாதனமாக அமையும் சக்தி படைத்தது, அதே போன்று, எள்ளுப் போட்டால் எண்ணெய் கக்கும். ஒரு சனசமுத்திரமும் இந்த வேலையைச் செய்து விடக்கூடும. இவ்வாறு கதம்பமான ஒரு சூழ்நிலையினின்றும் பிறக்கும் அருஞ்சொற்றொடர்கள் வெகுஜன விருப்பை நிறைவேற்றும் பெற்றி வாய்ந்தனவாகவே அமைந்தும்விடுகின்றன.

---

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## ஆலயப் பிரவேசம்

ஆலயப் பிரவேச விஷயம் நன்காலோசித்து முடிவுசெய்யுங்கால் கோயில் தருமகர்த்தாக்கள், பரிபாலகர்கள் என்போர் பொதுப்பும் அபிப்பிராயமும் நோக்கப்படுவது அவசியமென்பதே என்து அபிப்பிராயம்.

இலங்கையில் உள்ள சைவ ஆலயங்கள் பல திறத்தனவாயினும், பிரதானமாக மூன்று வகுப்புக்களுள் அடக்கலாம்.

(a) குடும்பங்களைச் சேர்ந்த ஆலயங்கள். இவ்வாலயங்கள் பல குடும்பக் குழுவைச் சேர்ந்துள்ளன. பரம்பரையாகவரும் தருமகர்த்தாக்களே இவ்வாலயத்தைப் பரிபாலிப்பார்கள்.

(b) சைவசமயிகள் யாவர்க்கும் பொதுவாகவுள்ள கோயில்கள். இவ்வாலயங்கள் அரசர்களால் அல்லது தனவந்தர்களால் அமைக்கப்பட்டனவாகும். இவ்வாலயங்களின் பரிபாலன செலவுக்கு நிலங்களும் மூல தனங்களும் தொன்றுதொட்டு விடப்பட்டுள்ளன. இவ்வாலயங்களைப் பரிபாலிப்போர் சிலகாலத்தில் தெரியப்பட்டும் சிலபோது பரம்பரையாக உரிமையாக அதிகாரம் பெற்றும் கடமையாற்றுவர்.

உலகம் எங்கும் நடப்பது போல் இப்போது சைவமக்கள் சமுதாய வாழ்விலும் எத்தனையோ மாற்றங்களும் திருத்தங்களும் ஏற்பட்டுவருந் தறுவாயில், அரசினர் அவசியமின்றிச் சமய விஷயங்களில் ஈடுபடாதிருப்பது மிகச் சிறந்த செயல் என்று கூற வேண்டும். இந்துக்களையும் அவர்கள் ஆலயங்களையும் பொறுத்த விஷயங்களில் இலங்கைப் பாராளுமன்றத்திற் சட்டமியற்றுவது மிகத்தவறாகும். இம்மன்றத்தில் இந்துக்களாயுள்ள அங்கத்தவர் மிகச் சிலரே.

சகநாயக முறையில் விஷயங்கள் நடத்தப்பட வேண்டின், இவ்வாலயங்களை ஆதரித்து வழிபடுபவர்களின் வணக்கத்துக்குரிய கூட்டத்தினரே இவ்விஷயத்தை முடிவு செய்யவேண்டும். இதற் சேர்ந்தோரின் அட்டவணையைத் தயாரித்து கூட்டங்களைக் கூட்டி அபிப்பிராயத்தை அறியவேண்டும். செய்யப்படும் தீர்மானங்கள் குறைந்தபட்சம் நூற்றுக்கு எழுபத்தைந்து பெயரின் ஆதரவைப் பெற்றனவாக வேண்டும். இவ்வாறன்றி வேறு உபாயங்கள் கையாளப்படின், வெட்டுக்கொத்தும் அடிபிடியும் இரத்தப்பெருக்குமாகவே முடியும். இவ்வாறு சம்பவிக்க இவ்வாலய பரிபாலகர்கள் இடங்கொடுப்பாராயின் அவர்கள் தாம் கையேற்ற பொறுப்புக்கு இரண்டகஞ் செய்தவராகக் கருதப்படுவர்.

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க,

---

# வைத்திய சுகாதாரப் பகுதி

## மருத்துவப் பயிற்சி

பதினெட்டு மாத மருத்துவப் பயிற்சிபெற விரும்பும் பெண்கள் தங்கள் விண்ணப்பப் பத்திரங்களை **1949-ம் ஆண்டு ஏப்பிரல் மீ 12-ந்உ அல்லது** அதற்கு முன்னதாகக் கிடைக்கும்படி வைத்திய சுகாதாரப் பிரதமத் தலைவருக்கு அனுப்பவேண்டும்.

2. விண்ணப்பம் செய்வோரின் (அ) வயது 1949-ம் ஆண்டு ஒக்றோபர் மாதம் 1-ந் திகதியன்று 20-க்கு மேலும், 30-க்குக் கூடாமலும் இருக்கவேண்டும். (ஆ) அவர்கள் ஆங்கிலத்திலேனும் சிங்களத்திலேனும் அல்லது தமிழிலேனும் கனிஷ்ட தராதரப் பரீட்சையில் தேறியிருக்கவேண்டும்; அன்றேல் வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப்பட்ட சமமான அல்லது மேலான வேறுபரீட்சையில் தேறியிருக்கவேண்டும். (இ) வித்தியாபகுதியாரால் இனிமேல் கனிஷ்ட தராதரப் பரீட்சை நடத்தப்படமாட்டாதாகையால் மனுச்செய்வோர் தலைமை உபாத்தியாயரிடமிருந்து தாங்கள் அப்பாடசாலையால் நடாத்தப்பட்ட கனிஷ்ட தராதரப்பரீட்சையில் 1944-ம் ஆண்டின்பின் ஆங்கிலத்திலும், 1945-ம் ஆண்டின்பின் சிங்களத்திலேனும் தமிழிலேனும் சித்தியடைந்தவர்களென நற்சாட்சிபபத்திரம் வாங்கி அனுப்பவேண்டும்.

3. விண்ணப்பங்களைக் குறிக்கப்பட்ட முறையில் தயாரித்துச் சமர்ப்பிக்க வேண்டும், மாதிரிப் பத்திரங்களை 1949-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 2-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட "கெசற்" பத்திரிகையில் காணலாம்,

4. விண்ணப்பம் செய்வோருக்குக் கீழ்க் குறிக்கப்பட்ட பாடங்களில் ஓர் போட்டிப் பரீட்சை நடாத்தப்படும்:-

(அ) இலேசான ஒரு விஷயத்தைப்பற்றிய வியாசம்.
(ஆ) இலங்கைச் சரித்திரம்.
(இ) இலங்கைப் பூமிசாஸ்திரம்.

பரீட்சைப் பிரவேசக் கட்டணம் ரூபா 2-50. இக்கட்டணத்தை அனுப்பும்படி அறிவித்தாலன்றி விண்ணப்பக்காரர் அனுப்பப்படாது.

5. இப் போட்டிப் பரீட்சையிற் பெற்ற புள்ளியின்படி தேவைப்பட்ட தொகையினர் 1949-ம் ஆண்டு ஒக்றோபர் மாதத்திலும், 1950-ம் ஆண்டு ஜனவரி, ஏப்பிரல், ஜூலை மாதங்களிலும் நடக்கவிருக்கும் பயிற்சி வகுப்பிற் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். தெரிவு செய்யப்பட்டவர்கள் தேக சுகத்தில் தகுதியெனக் காணப்படவேண்டும்.

6. இப்பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டவுடன் ஒவ்வோர் பெண்ணும் பயிற்சி முடிந்ததும் இவ்விலாகாவில் மூன்றுவருட காலத்திற்குக் கடமையாற்றுவேனென ஓர் உடன்படிக்கை எழுத வேண்டும்.

7. மனுப்பத்திரத்தை யனுப்பும் உறையில் இடது பக்கத்து மூலையில் **'மருத்துவப் பயிற்சிக்கு மனு'** என்று எழுதி **வைத்திய சுகாதாரப்பகுதிப்பிரதமதலைவர், தபால்பெட்டி இல.500 கொழும்பு** என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

8. எனக்கேனும், அல்லது இப்பகுதியிலுள்ள வேறெவர்க்கேனும் பெயர் குறித்து விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பப்படாது.

**வைத்திய சுகாதார பிரதம தலைவர்**

கொழும்பு 1949-ம் ஆண்டு (மார்ச்) பங்குனி மாதம் 10-ந் திகதி

அட்டவணை

### வைத்திய சுகாதாரப் பகுதி
### மருத்துவச் சேவை
### மருத்துவத்தாதி மாணவிகளின் பயிற்சி வகுப்புக்காக விண்ணப்பப் பத்திரம் (மாதிரி)

மருத்துவத் தாதி மாணவிகளாகச் சேரவிரும்பும் பரீட்சார்த்திகள் கீழே கேட்கப்பட்ட விபரங்களைக் கொடுக்கவேண்டும். இப்பத்திரத்தைப் பிழையின்றி நிரப்பி வேண்டிய அத்தாட்சிப் பத்திரங்களுடன் சித்திரை மாதம் 12-ந் திகதிக்குமுன் அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பாதவர்களுடைய பத்திரங்கள் கவனிக்கப்படமாட்டா.

1. முழுப் பெயர்: ______
2. விலாசம்: ______
3. பிறந்த திகதியும் ஆண்டும் ______ (பிறப்புப் பத்திரப்பிரதி அணைக்கவேண்டும்)
4. பாடசாலையும் சித்தி அடைந்த சோதனையும் ______
5. சாதியம் (தமிழ், சிங்களம்): ______
6. சமயம்: ______
7. விவாகம் செய்ததா அல்லவா: ______
8. விவாகம் செய்தால் புருஷன் இருக்கிறாரா? எத்தனை பிள்ளைகள். பயிற்சிக்கு எடுபட்டால் அவர்களை யாருடன் விட முடியும்: ______
9. தலைமை உபாத்தியாயரிடமிருந்து எவ்வகுப்பிற் சித்தி அடைந்திருக்கிறீரெனச் சாட்சிப் பத்திரம் வாங்கி அணைக்கவும்: ______
10. இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் அணைக்க வேண்டும்: ______
11. தகப்பனாரின் அல்லது பராமரிப்புக்காரனின் பெயரும், விலாசமும்: ______
12. இதற்குமுன்னர் ஆற்றிய அரசாங்க சேவை ஏதுமிருப்பின்: ______
13. கீழ்க் குறிக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளுகிறீரா: ______

அரசாங்க சேவையிலிருந்து எப்பொழுதேனும் தொழில் திறமையின்மை காரணமாக இளைப்பாற்றப்படலோ அல்லது தொழிலிலிருந்து நீக்கப்படலோ இல்லையென்றும், கோட்டில் 'கிறிமினல்' குற்றச்சாட்டுக்காகக் குற்றவாளியெனக் காணப்படவில்லையென்றும் இத்தால் நான் உறுதிமொழி அளிக்கிறேன்.

[3639] விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

சுன்னாகம், சர்வதாரி, பங். ௭

— காந்தி ஆண்டு 80 —

## தெருக்களின் பரிதாப நிலை

யாழ்ப்பாணத்திலுள்ள தெருவீதிகள் அடைந்துள்ள கேவல நிலையை நோக்குமிடத்து, அரசினர் தமது கடமையைச் செய்யவில்லையென்றே எண்ணவேண்டியிருக்கின்றது. எவ்வளவு காலமாக இந்த வீதிகள் திருத்தப்படாதிருக்கின்றனவோ யாரறிவார்? அரசினர் வருமானத்தின் பெரும்பாகம் பகிரங்க வேலைப்பகுதிக்கே செலவிடப்படுகின்றது. அப்படியாகத் தெருக்கள் கவனிக்கப்படாதிருப்பது பெரிதும் ஆட்சேபத்துக்கிடமான விஷயமல்லவா? போக்குவரத்துக்கள் மிகவும் அதிகரித்துள்ள இக்காலத்தில், வீதிகளைத் தற்கால முறைப்படி நன்னிலையில் வைத்திருப்பது எவ்வளவு அவசியமாகும்? தென்னிலங்கையில் எந்த வீதியை நோக்கினும், அது மிகச் சிறந்த நிலையில் வைத்து நடத்தப்படுவது யாவரும் அறிந்த விஷயம். வட இலங்கையில் இக்குறை நீடித்திருப்பதற்கு ஏதோ காரணம் இருக்கின்றது போலும்?


தெருவீதிகள் பரிபாலனம் ஒருபுறமிருக்க, தெருவீதிகளின் அமைப்புக்கும் அவைகளின் விசாலத்துக்கும் ஏற்ற முறையில் வண்டிகள், 'மோட்டார்'கள் செல்ல அனுமதி கொடுப்பதல்லவோ முறை. எட்டுப் பத்து வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாதிருக்கும் வீதிகளிற் கூட 'பஸ்' போக்குவரவு செய்ய அரசினர் உத்தரவளித்துள்ளார். தார் போடப்படாத தெருக்களில் 'பஸ்', 'லொறி' முதலிய பிரமாண்டமான வாகனங்கள் போக்குவரவு செய்தால், அவ்வீதி எப்படியிருக்கும்? ஒரே புழுதி மயமாகவேயிருக்கின்றது. திட்டிகளும் கிடங்குகளும் நிறைந்த இவ்வீதிகள் மாரிகாலத்தில் ஒரே வெள்ளக்காடாகவேயிருக்கும். தவளைகள் குடும்பம் நடத்துவதற்கும் ஆமை, முதலை போன்ற விஷ ஜந்துக்கள் வசிப்பதற்கும் வசதியாயுள்ள இவ்வீதிகளின் வழியாகப் பிரயாணஞ் செய்வோர் அடையும் கஷ்டத்தைக் கூறினும் அடங்குமா? இக்குறைகளைப் பன்முறையாக அரசினர்க்கு எடுத்துக் காட்டினுலும் அதைப் பொருட்படுத்துவது கிடையாது. அரசினர் இத்தெருக்களைத் திருத்தப் பணம் ஒதுக்கிவைக்கவில்லையென்று எப்படிக் கூறுவது? விடப்பட்ட பணந்தானும் ஏற்ற முறையிற் செலவாயிற்ரு என்பதும் அறியப்பட வேண்டியது. உதாரணமாக சுன்னுகத்திலிருந்து மாகியப்பிட்டியை நோக்கிச் செல்லும் வீதியை ஒருகால் எந்த அரசாங்க உத்தியோகத்தர்தானும் நோக்கின், இதன் உண்மை விளங்கும். இப்படியான பாழடைந்த வீதி வேறு எங்கேயாவது கிடையாது.

அரசினர் தெருவீதிகளைத் திருத்தல் முதலிய பகிரங்க வேலைகட்காக ஒதுக்கப்படும் பணம் முற்ருகக் குறித்த விஷயத்திற் செலவாவதில்லையென்பது யாவரும் அறிந்த உண்மை. இதனை நன்கு அரசினரும் அறிவார். விடப்பட்ட பணத்தில் நாலிலொரு பாகந்தான் ஒருபோது உண்மையாகச் செலவாகலாம். மிகுதிப்பணம் வேறு வடிவமாக மாறிக் கண்ணுக்குத் தெரியாது மறைந்து விடுகின்றது. இந்த வியாதி நேற்று இன்று ஆரம்பித்ததொன்றன்று. பகிரங்கப்பகுதியில் 'ஓவசியர்' வேலை பார்ப்பதானுல் எவரும் ஆவலுடன் ஓடிவருவார். மேலும் இவ்வியாதி குறிக்கப்பட்ட ஒரு பாசத்தில் உளதாயின் அதை மாற்றிவிடலாம். சர்வாங்கத்தையும் தாக்கி நிற்கும் இந்நோயை இலகுவில் மாற்றிவிட முடியாது. பகிரங்கப் பகுதி உத்தியோகத்தர் பகிரங்கமாக இக்கிருத்தியங்களைச் செய்து வருவது மிகவும் கண்டிக்கப்படவேண்டிய விஷயமன்றோ!

அரசாங்கப்பணம் ஏழை மக்களிடம் பெற்ற வரியென்பதை யாவர்தான் அறியார்? இப்பணம் நீதியாக எவருக்கும் உபயோகமாகும் முறையிலன்றோ செலவாகவேண்டும். பரிதாப நிலையில் தெருவீதிகளை வைத்திருப்பது எவ்வளவு துரோகமான செயல்? சில வீதிகளில் எத்தனையோ வித்தியாசாலைகள் உள்ளன. இவ்வீதிகள் திருத்தப்படாதிருப்பதால் நாள்தோறும் இவ்வீதிகளின் வழியே செல்லும் மாணவர் எத்தனையோவிதமான சிரமங்களை அடைகின்றனர். தேகாரோக்கியம் எவ்வளவுக்குப் பங்கமடைகின்றது? அரசினர் இனியாவது இவ்வித குறைகள் ஏற்படாதிருக்க வழிகாணவேண்டும். பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் பிரதிநிதிகளாவது இத்தீமைகளையும் குறைகளையும் நீக்க முன்வரவேண்டாமா? இக்குறைகள் நீடித்து நிலைபெற்றுவருகின்றனவென்பது யாவரும் அறிந்த விஷயம். சுதந்திரம் பெற்றபின்னுவது பகிரங்கப்பகுதியின் நிர்வாகம் தூய்மையடைய இடமில்லையா? அரசினர் இவ்விஷயத்தின் அவசியத்தை நோக்கி வேண்டியதைச் செய்வாராக.

## புதிய கட்டுப்பாடு

இப்போது, இலங்கைக்கும இந்தியாவுக்குமிடையிற் பிரயாணம் செய்வோர் எவ்வித கட்டுப்பாடுமின்றிப் போக்கு வரவு செய்யும் உரிமையுடையர். இலங்கையரசினர் இந்தியரிற் கொண்ட துவேஷம் காரணமாக, இலங்கைக்குள் வருவோர் இலங்கையிலிருந்து வெளியேறுவோர் என்பவர்களைக் கட்டுப்படுத்தப் புதிய சட்டங்களை இயற்றியுள்ளார். இச்சட்டங்கள் விரைவில் அனுசரணைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகின்றது. அப்போது இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் வருவோர் எவரும் உத்தரவுச் சீட்டுப் பெற்றுக்கொண்டே வரவேண்டியதாகும். அவ்வுத்தரவுச் சீட்டுகள் இலங்கையரசினரின் அங்கீகாரத்தைப் பெற்றனவாக வேண்டும். இதைக்கண்டு இந்திய அரசினரும புதிய ஒரு சட்டத்தை இயற்ற முடிவு செய்துள்ளார். அதன்படி, இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் செல்வோர் இந்திய அரசினரின் அனுமதியோடுதான் அங்கு செல்ல வேண்டியதாகும். அப்படியாயின், இவ்விரு நாடுகட்கிடையிற் போக்கு வரத்துகள் பெரிதும் தடைப்படுமென்றே கூறவேண்டும். நினைத்தபடி பிரயாணம் செய்வதும் கஷ்டமாகிவிடும். பிரிட்டிஷார் ஆட்சியில இவ்வளவு காலமும் ஏற்படாத புதிய சங்கடங்கள் இப்பொழுது வந்து சேர்கின்றன. இலங்கை பெற்ற சுதந்திரமே சிங்கள மக்களின் தலைப்பாரத்துக்குக் காரணமாகும். ஏதோ இந்தியாவின் உதவியும் ஒத்தாசையுமின்றி வெட்டி விழுத்திவிடலாமென அரசாங்க அதிகாரத்தைப் பெற்ற சிங்களத் தலைவர்கள் கனவு காண்கின்றனர்போலும. இரு நாடுகட்குமிடையில் நெருங்கிய நட்பும தொடர்பும் சரித்திர காலந் தொடக்கம் இருந்து வருகின்றன. இதற்குப் பங்கம் விளைப்பது எப்படிப் பொருந்துமோ? எத்தனையோ விஷயங்களில் இலங்கை இந்தியாவை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. இதை எவரும் மறுத்துவிட வியலாது. அந்நிலையில், இரு நாடுகட்கிடையில ஒற்றுமையை உறுதிப்படுத்துவதா? அல்லது வேற்றுமையைப் பெருக்குவதா? உசிதம் என்று கேட்கின்றோம். மேல் நாட்டாரை நம்பி நமது சிங்களத் தலைவர்கள் இந்தியருடன் அளவு கடந்து முரணடைதல் நன்மைக்காகுமென நாம் நம்பவில்லை. இந்திய அரசினர் எந் நாட்டினையும் அடிமைப்படுத்த விரும்பவில்லை. யாவரும் சுதந்திரமாக வாழவேண்டும்; சமவுரிமையைப் பெறவேண்டுமென்பதே பண்டிதர் நேருவின் வெளியான கோட்பாடு. இந்த முறையில் இரு நாடுகட்கிடையிலும் பலவிதத்திலும் ஐக்கியமும் விசுவாசமும மேன்மேலும் ஓங்கி வளரவேண்டாமா? இலங்கையரசினர் தடுமாற்றமடைந்து பிழை வழிச் சென்ருல் அதனல் வரும் இன்னல்களுக்கும் அவர்களே பொறுப்பாளராவர்.




பாரதிக்கு விடுதலையென்ருல் அது தமிழ்மொழிக்குத்தான் விடுதலையாகும். பாரதியாரின் நூல்கள் அனைத்தும் இன்று பொதுச் சொத்தாகிக் கொண்டதை வாசகர்களுக்கு அறிவிப்பதற்காகவேதான் இதை இங்கு எழுதுகின்றேன். இதுவரை பாரதி பாடல்களின் உரிமையனைத்தையும் ஸ்ரீ ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் அவர்களே பெற்றிருந்தார். இப்போது செட்டியாரும் பாரதியாரின் சகோதரனும் குறித்த உரிமைகள் அனைத்தையும் சென்னை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளனர். சுதந்திரம பெற்ற பாரதநாட்டிற் பாரதியார் மட்டும் விடுதலை பெருமல் இருப்பதைக்கண்டு சில மாதங்களுக்கு முன்னர் ஸ்ரீ வ. ரா. அவர்களின் தலைமையிலே திருலோகசிதாராம் உட்படப் பத்திரிகை ஆசிரியர்கள் பலர் பாரதி விடுதலை இயக்கத்தை ஆரம்பித்து அரசினர் கண்களைத் திறந்து வைத்தனர். இன்று பாரதியாரின் பொக்கிஷம் மக்கள் சொத்தாகியதைக் கண்டு தமிழ்மக்கள் மகிழ்கின்றனர்.

❖

### மாயமாய் மறைதல்

வாழ்க்கையானது காலையிற் பனிபோல் மாயமாக மறைந்து விடுகின்றதெனப் படித்தவர்கள் பேசுகின்றனர். இதேபோன்று, சில பள்ளிக்கூடத்து ஆசிரியர்களும் சொல்லாமற் பேசாமலே திடீரென மறைந்து விடுகின்றனர். முறைப்படி எழுதி ஒழுங்கு செய்வதை இவர்கள் கௌரவமாகக் கருதுவதில்லைப்போலும். இவர்கள் திரும்பவும திடீரெனத் தோன்றிப் பழைய தேதியையிட்டு லீவுப் பத்திரம் சமர்ப்பிப்பதுடன் நிற்பதில்லை. தலைமை ஆசிரியரையும் பொய்த்தேதியைக் குறிக்கச் செய்து, லீவுப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கச் செய்து விடுகின்றனர். தலைமை ஆசிரியர் இந்த அடாத வேலைக்குத் தயங்கினுல், "ஓய், நீர்தான் எல்லாம் முறையாகச் செய்து சுத்தமாக நடந்து கொள்ளுகின்றீராக்கும்." என்று சொல்லிக்காற்பெருவிரலில்எழுந்து நின்று உரக்கப் பேசுவார்களாம். அந்த அப்பாவி மனுஷன் பள்ளிக்கூட மனேஜருக்கும், உதவி ஆசிரியர்களுக்கு மிடையில் நின்று திண்டாடுவாராம். இத் திரிசங்கு சுவர்க்கத்தில் எத்தனை தலைமை ஆசிரியர்கள் இழுபடுகின்றனரோ யாருக்குத் தெரியும்.

## பெயர்பெற்ற தமிழன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிட வேண்டுமென்று தோழர் தஹநாயகா சமர்ப்பித்த பிரேரணை தோல்வியுற்றது. அவர் தமது பேச்சின் மூலம் **டெய்லி நியூஸ்** காரியாலயத்துப் பத்திரிகைகள் அரசாங்க விளம்பரங்களைக் கொண்டு தொகையான பணம் உழைக்கின்றன வென்ற உண்மையையும் அம்பலப்படுத்தியிருந்தார்.

**தமிழ்க்காங்கிரஸ்**

வியாழக்கிழமை பிற்பகல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அதிகார சபையினர் கூடினர். மந்திரி பொன்னம்பலம், ஸ்ரீமான்கள் கனகரத்தினம், குமாரசுவாமி சிவபாலன் என்பவர்கள் தமிழ்க் காங்கிரஸைக் கை கழுவி விடுவார்கள்; ஸ்ரீ செல்வநாயகம், டொக்டர் நாகநாதன், ஸ்ரீ ஸி. வன்னியசிங்கம் என்ற 'கம்பனி' யே இனித் தமிழ்க் காங்கிரஸ் என்ற அரைகுறை அரசியல் வங்கியைக் கையேற்று நடாத்துவார்கள் என்றும் ஒரேபேச்சாக இருக்கின்றது.

## பல்கலைக்கழகப் பிரவேசம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூண்டு அவைகளையும் நோக்கினுரில்லை. மேலும் ஆங்கிலம் கற்கும் விஷயத்தில் ஆண்களிலும் பெண்களே விசேஷ அக்கறைகொண்டிருப்பதைக் காணலாம். மாகாணங்களில் ஆங்கிலக் கல்விக்கு இதுவரையும் இருந்துவந்த ஆர்வம் பன்மடங்கு குறைந்து வருவதைக் காணலாம். பிரதானமாக யாழ்ப்பாணத்தில் இவ்விஷயம் மிக வெளிப்படையாகக் காணப்படுகின்றது.

## வர்தா கல்வி விளக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுதான் அவர் கடைசியாகக் கூறிய செய்தி:

'இந்த **நைய் தாலி**—ஆதாரக் கல்வி—, இந்தியாவுக்குக் கிடைத்த ஒரு மாபெரும் பொக்கிஷம். இதில் எல்லாம் இருக்கின்றது. இந்த ஆதாரக் கல்வி என்னும் சாகரத்தில் நாமெல்லோரும் மிதந்து செல்லக்கூடுமாயிருந்தால், அதில் நீர் (ஸ்ரீராமச்சந்திரன்) அமிழ்ந்துபோகவேண்டும் என்பதுதான் எனது விருப்பு.' இம்மாதிரியான ஒரு மகத்தான ஆசீர்வாதச் செய்தியை எமதுமாபெரும் குரு இந்த நைய் தாலிக்கு அளித்துள்ளார். இதனையே நான் உங்களுக்குக் கொண்டுவந்துள்ளேன்.

'இந்த ஆதாரக் கல்விக்குத் தமது உயிரையே அர்ப்பணஞ் செய்யக்கூடியவர்கள் இதில் ஈடுபடவேண்டும். இல்லாதபோனுல் இதனுேடு விளையாடுபவரெல்லாம் இதனுலே நசிக்கப்படுவார்கள். ஆதாரக் கல்வியை நாம் புதிதாகக் கொண்டுவரவில்லை. பத்துவருட காலமாக இதில் ஈடுபட்டு, அதிலே இளைத்துப் பெற்றுக்கொண்ட சொந்த அனுபவங்களையே எடுத்துக் கூறுகின்றேன். 10 வருடமாகத் தீவிரமாக உழைத்ததின்பின்பே, நாங்கள் ஒரு சரியான பாதையில் போகின்ருேம் என்பதை உணருகின்ருேம்' எங்களிடம் ஆதாரக் கல்வி வல்லுநர்கள் பலர் இருக்கின்ருர்கள், இவர்களுள் முதலிடம் பெற்றவர் டொக்டர் ஸகீத் ஹுசேன் என்னும் முஸ்லீம் பெரியாராவார். இவரைக் சர்வதேச சங்கக்கல்வி விற்பன்னருள் மிகவும் மேம்பட்ட ஒருவர் என்று சொல்வது பொருந்தும் இவரே ஜமயமிலியா இஸ்லாமிய என்ற பிரசித்திபெற்ற சர்வ கலாசாலையை அரசாங்க உதவியின்றி ஸ்தாபித்தவர். இரண்டாவதாக, யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவப் பெரியார்எற்வேட்வில்லியம் அரியநாயகம் அவர்கள் தலைசிறந்து விளங்குகின்ருர். இவர் 10 வருடமாக **விஸ்வபாரதி**யில் உழைத்தவர். மூன்ருவதாகக் கூறக்கூடியவர் ஓர் பெண்மணியாவர். இவர்தான் திரு. அரியநாயகம் அவர்களின் பாரியாராகும் ஸ்ரீமதி ஆஷாதேவி. 5 நிமிஷம் மாத்திரம் இவருடன் பேசினுல் ஆதாரக்கல்வி சம்பந்தமாக யாவற்றையும் புகுத்திவிடுவார். அவரது சுற்ருடலே ஆதாரக் கல்விமயமாகவிருக்கும். இப்படியாக எண்ணற்றவர்கள் இக் கல்வித் திட்டத்திலீடுபட்டு அதனை கடைமுறையிற் பரப்பிவருகின்றனர். மத்திய அரசாங்கம் இத்திட்டத்தைப் பரப்புவதில் தீவிர முயற்சி எடுத்துவருகின்றது. இன்னும் 15 வருடங்களில் இந்தியாவிலுள்ள சகல ஆரம்ப பாடசாலைகளிலும் இத் திட்டப்படி கல்வி பயிற்றப்படும்.

ஆதாரக்கல்வி என்ருல் என்ன? இதனை எவரும் இலகுவில் விளங்கிக்கொள்ளலாம். சாதாரண மக்கள் இதனை இலகுவில் விளங்கிக் கொள்வார்கள். ஆனுல் அதிகம் கற்றவர்களுக்குத் தான் இதனை விளக்குவது முடியாதாகும். ஆதாரக் கல்வியைப்பற்றி இரண்டு வசனத்திற்சொல்வதாகில்சாதனையைக்கொண்டும், சாதனை மூலமும் கல்விபயிற்றுதலாம் எனக்கூறுவாம். தற்போதைய கல்வியைப் பார்க்குமிடத்துப் புத்தகங்களைக் கொண்ட கல்வித்திட்டமே இங்கு காணப்படுகின்றது. ஏராளமான புத்தகங்களைச் சுமக்க முடியாது தூக்கிச் செல்லும் ஒரு குழந்தை எப்படி அவைகளைப் படித்து முடிக்கிறதோ? இதில் உண்மையான பரீட்சார்த்தம் கிடையாது; இது நாளாந்த வாழ்க்கையிலிருந்து குழந்தையைப் பிரித்து விடுகிறது. ஆதாரக் கல்வியைப்பற்றி காந்திஜி சொன்னதாவது: 'இத்திட்டம் எங்களை எங்கள் நாட்டிலே அன்னியர் போலாக்கிவிட்டது: புத்தகக்கல்வியாக இருந்த திட்டத்தைச் சாதனைக் கல்வித்திட்டமாக்கியதே இதற்குக் காரணம். இத்திட்டப்படி குழந்தைகள் வாழ்க்கையின் அண்மையிலிருக்கின்றனர். முதியவர்கள் வாழ்க்கையிலிருந்து விலகி விலகிப் போகும்போது, குழந்தைகள் வாழ்க்கையை நாடி நாடிச்செல்கின்றனர்.

ஒரு குழந்தை ஏதாவதொன்றைப் படிப்பதிலும் பார்க்க அதைச் சாதனையிற் கொள்வதே வேண்டப்படுவது. சாதனைமூலம் கற்பிப்பதே குழந்தையை உற்சாகப்படுத்துவதோடு எப்பொழுதும் அதனுேடு தொடர்புடையதாக்குகின்றது. இம்மாதிரியாகவே குழந்தையின் கவனத்தை ஈர்க்கச் செய்யவேண்டும், குழந்தையின் மனப்போக்கையுணர்ந்து அதன் வழியிலே செல்ல விடவேண்டும். அது செல்கின்ற பாதையிலே ஆசிரியனும் சென்று அதனைச் சரியான பாதைக்குக் கவர்ச்சிகரமாக இழுத்துச்செல்ல வேண்டும். இப்படிச் செல்லும்போது அது காரியார்த்தமாகவும், பலன் தரக்கூடியதாகவும் இருக்க வேண்டும். இதற்கு இணைப்புச் சாஸ்திரம் பேருதவியாகும்.

முதன்முதலாக, பம்பரம் போன்ற இத் தக்ளிக் கருவியைக் குழந்தைகளிடம் வழங்கவேண்டும். இதனை மூலாதாரமாக்கொண்டு, அணுக்குண்டுச் சக்திவரைக்கும் பயிற்றலாம். தக்ளியின் சித்தாந்தத்தை உணர்ந்தால் அணுக்குண்டின் அழிக்குஞ் சக்திக்குப் போகமாட்டார்கள. ஆகவே 'தக்ளி'யைக்கொண்டே சகல ஆதாரக் கல்வியையும் ஆரம்பிக்கலாம். இதற்குக் கற்பலகையும், கற்கூரும், புத்தகங்களும் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வேலைநிறுத்தம் வீணாயிற்று

**- இந்தியா -**

**புகையிரதப்பகுதியில் வேலை** செய்யும் தொழிலாளர் சென்ற பதினொன்காந் திகதி வேலை நிறுத்தஞ் செய்யப்போவதாக முடிவு செய்திருந்தனர். அரசினர் எதைச் சொல்லியும் கேட்டாரில்லை. ஜெயப்பிரகாஷ் நாராயணனின் தகுந்த புத்திமதிக்கும் செவி சாய்த்தனரில்லை. போலித் தலைவர்களின் சொல்லைக் கேட்டு எப்படியாவது வேலைநிறுத்தஞ் செய்வதென்ற முடிவுசெய்திருந்தனர். அரசினரும் இந்த நெருக்கடியைச் சமாளிக்க வேண்டிய ஆயத்தங்கள் செய்திருந்தனர். பின் குறித்த திகதிக்கு முதல் நாள் தொழிலாளர் வேலைநிறுத்தம் நிற்பாட்டப்பட வேண்டுமென முடிவுசெய்தனர். இத் தொழிலாளரின் இயக்கத்துக்கிருந்த சிறிய மதிப்பும் போய்விட்டது. இனி அரசினர் இவர்கள் கோரிக்கைகளை மதிப்பார்களா? இந்தியா சுதந்திரமபெற்று மிக்க நெருக்கடிகளை அடைந்துகொண்டிருக்கும் இச்சமயத்திலா அரசினர்க்குக் கஷ்டங்களை வருவிப்பது?

## காந்தி ஞாபகநிதி

இந்நிதிக்குப் பணஞ்சேர்க்கும் விஷயத்தில் காங்கிரஸ் தலைவர் பட்டாபி சீதாராமய்யாவும், பாபு இராசேந்திரப்பிரசாத் அவர்களும் அரிது முயன்று வருகின்றனர். போதிய வேலைசெய்யின் இந்நிதி பல்கிப் பெருக இடமுண்டென இராஜன் பாபு கூறினர். ஒரு நாளில் மாத்திரம் தாம் இரண்டு இலட்சம் ரூபா சேர்ந்ததாகக் கூறினர். மற்றைய தலைவர்களும் தொண்டர்களும் ஊக்கத்துடன் இவ்விஷயத்தில் ஈடுபடின் நினைத்த தொகை சேர்க்கவியலும் என்பது இவர் கருத்து. பம்பாயில் மாத்திரம் இரண்டு கோடி ரூபாய் சேர்க்கப்பட்டது. இது வரையிற் சேர்ந்த மொத்தத் தொகை பத்துக் கோடி ரூபாவாகும். ஒவ்வொரு மாகாணங்களிலும் கிராமங்களிலும் தலைவர்களனைவோர் சிரத்தையெடுத்து வேலைசெய்து இந்நிதியைப் பெருக்கவேண்டுமென்று காங்கிரஸ் தலைவர் கூறியிருக்கின்றனர். தென்னிந்தியாவிலும் சென்று இந்நிதி சேர்க்கவேண்டிய எத்தனங்கள் செய்யப்படும். காங்கிரஸ் தலைவரும் இராஜன் பாபுவும் சென்னைக்கு விஜயம்செய்வார்கள்.

## கொம்யூனிஸ்ட் கொடுமை

இந்தியாவிலே கொம்யூனிஸ்ட் கட்சியினரின் கொடுமை வர வர அதிகரிக்கின்றது. கல்கத்தாவில் இவர்கள் செய்த அட்டூழியங்கள் மிக்க பரபரப்பினை உண்டுபண்ணி விட்டது. என்றாலும் இந்திய அரசினர் இவர்கள் எண்ணங்கட்கு இடங்கொடுக்கப் போவதில்லை. புகையிரதத் தொழிலாளர் வேலைநிறுத்தங்கள் ஏற்படுவதற்கும் இவர்களே காரணராவர். வேலைநிறுத்தங்கள் மாத்திரமல்ல வேறு வழிகளையும் கையாண்டு காட்டிப் பஞ்சம், பிணி, கலகம் என்பவற்றை உண்டாக்கி அரசினர்க்கு மிக்க இன்னலை விளைக்க உததேசிக்கின்றனர். இது எப்போதாவது பலிக்கப்போவதில்லை. இந்தக் கொம்யூனிஸ்ட் போர்வழிகள் சுயநல வேட்டைக்காரரன்றித் தேசிய நோக்குடையவரல்லர். இவர்கட்கு ஒருபோதும இடங்கொடுக்கப் போவதில்லையெனப் பண்டிதர் நேரு கூறிவிட்டனர். இந்த நெருக்கடியான சமயத்தில் இந்தியாவிற் குழப்பங்களைக் கிளப்பிவிடுவது துரோகமாகும்.

## புதிய சனநாயகம்

பாகிஸ்தான் அந்நியநாட்டு மந்திரியார் புதிய சனநாயக முறையொன்றினை உலகத்துக்குக் காட்டிக் கொடுக்கின்ருர். சென்ற எண்ணூறு வருடங்களாக இங்கிலாந்தில் கையாளப்பட்டு மிகவும் உச்சநிலையை அடைந்துள்ள அரசியல் சனநாயகத்தைச் சேரவில்லையாம். தொழிற்கட்சியினர் அதிகாரத்தைப் பெற்றபின் தான் சாதாரணமக்கள் கையில் அரசியல் வந்தது என்கின்ருர். அமெரிக்காவின் அரசியல்முறையும் சனநாயகத்தைக் கொள்ளவில்லையாம். அமெரிக்க ஜனாதிபதி சகல அதிகாரத்தையும் பெற்றுள்ளாராம். தன் எண்ணப்படி செய்கின்ருராம். இவருடைய கருத்துக்கள் எமக்கு விளங்கவில்லை. உண்மையான ஜனநாயகம் முஸ்லிம் சமய ஒழுங்கின்படி அரசுபுரிவதே என்கின்ருர். இவர் சொல்வதை எவர்தான் ஏற்க முன்வருவாரோ? சமயத்துக்கு முதன்மை கொடுக்கும் இராச்சியம் உலகில் எங்கேயாவது உண்டா? முஸ்லீம்கள் மாத்திரம் பாக்கிஸ்தானில் இருக்கவில்லை, இந்துக்களும் வேறு சமயத்தவரும அங்குளர். விஷயமிவ்வாருக, முஸ்லீம் கொள்கைகளையே இவ்வரசினர் அடிப்படையாகக் கொள்வது சிறிதும் பொருந்தாது.

## ஞாபக ஸ்தாபனம் வேண்டும்

சமீபத்திற் காலஞ்சென்ற இந்தியாவின் பெருமாட்டியாகிய ஸ்ரீமதி சரோஜினி தேவியின் ஞாபகத்தை நிலைநாட்ட இந்தியத் தலைவர்கள் முன்வந்துள்ளார்கள். இது ஏற்றதோர் கைங்கரியமாகும். பண்டித நேரு, சர்தார் படேல், இராஜகோபாலாச்சாரியார் ஆகிய தலைவர்கள் கைச்சாத்திட்டு ஓர் அறிக்கை வெளிவந்துளது. பத்து லட்சம் ரூபா சேர்த்து அலகபாத் நகரில் சிறுபிள்ளைகட்கு ஒரு வைத்தியசாலை அமைப்பதே இவர்கள் உத்தேசம். சென்ற ஐம்பது வருடங்களாக இடைவிடாது இந்திய மாதாவுக்காக அரிய பெரிய தொண்டாற்றிய இந்த மாதுசிரோமணிக்கு உண்மையான ஞாபகம் ஏற்படுவது அவசியமாகும். அரசியற்றுறையிலன்றி விளங்கியதுமன்றிப் பேர்போன கவிவாணராகவும் விளங்கி அரிய பெரிய நூல்களை இயற்றியுள்ளார். இப்பெருமை வாய்ந்த சீமாட்டியின் ஞாபகம் என்றும் நிலவ இந்திய மக்கள் நன்றியறிதலுடன் இந்நிதிக்கு உதவி புரிவார்கள் என்பதற்கு ஐயமில்லை.

## மொஸ்கோவில் மனப்பீதி

ஆசியா தேசத்தில் அபேதவாதம் என்ற கொர்யூனிஸ்ட் கொள்கைகள் பரம்பிவர, அதற்குத் தடையாக இந்தியா நிற்பதைக் கண்டு ருஷிய அரசினர் மிக மனக்கொதிப் படைகின்றனர். சீனத்தில் கொம்யூனிஸ்ட் ஆட்டம் பலித்துவிட்டதென்றே கூறவேண்டும். பர்மாவிலும் இவர்களது சார்பில் ஏற்பட்ட கலகம் முடிந்தபாடில்லை. ஆனல் இந்தியா இப்போது இந்தக் கொம்யூனிஸ்ட் கட்சியினரைத் தொலைத்துவிடக் கங்கணங்கட்டிநிற்பது ருஷியருக்குப் பிடிக்கவில்லை. ஒருபோது பர்மா அரசினர்க்கு உதவிபுரிந்து கொம்யூனிஸ்ட் ஆட்டங்கள் அங்கு பலிக்காமல் இந்தியா உதவி புரியவுங் கூடும். இந்தோனேஷியாவிலும் இந்த அபேதவாதக் கட்சியினரின் ஊக்கம் குறைந்துகொண்டே வருகின்றது. இந்தியாவே தமது பெரிய சத்துருவென்று ருஷியா கருதக்கூடும். பயங்கரமான கலகங்களையும் புரட்சிகளையும் இக்கட்சியினர் உண்டாக்கி வருகின்றனர். ஆசியாவில் இந்தக் கொம்யூனிஸ்ட் கொள்கை பரம்பாமல் தடுப்பது இந்தியாவைப் பொறுத்துள்ளது.

# ஆலயப் பிரவேசம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இததீமைகள் ஏற்படாது எல்லாம் விருப்பியபடி நடைபெறச் செய்யவேண்டின் சைவ மக்கட்கிடையில் மனமாற்றம் ஏற்படும்படி பிரசாரங்கள் போதனைகள் செய்யப்படவேண்டும். இதைச் செய்து முடிக்க ஒரு இந்து சமூகத்தினரின் ஸ்தாபனம் அவசியம். இந்து சமூகம் பங்கமடையாதிருக்கவும், வேண்டிய பல நன்மையைப் பெற்றுக்கொள்ளுதற்குமாக இவ்விதமான ஒரு சமய ஸ்தாபனம் விரைந்து அமைக்கப்படவேண்டும்.

ஓர் சைவாலய பரிபாலகர்

## 'காவியமும் ஓவியமும்'

சென்ற ஞாயிற்றுக் கிழமை (13-3-49) வெளிவந்த தங்கள் அருமைச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வி. எஸ். குருசாமியென்பார் ஒருவர், **காவியமும் ஓவியமும்** என்னும் தலைப் 'பெயருடன்' ஒரு கட்டுரைவெளியிட்டிருந்தார், அக்கட்டுரை திருவாளர் குருசாமிக் குரியதன்று.

ஆசிரிய கலாசாலைகளின் காரகர் சங்க வெளியீடான **ஆசிரியன்** என்னும் பத்திரிகையில், **மெய்ப்புலவன்,** என்னும் தலைப் பெயரோடு அதனைப் பண்டிதர் சோ. இளமுருகனர் அவர்கள் 1941–ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்கள். திரு. குருசாமி அவர்கள், அக் கட்டுரையின் பெயரை மாற்றியும், விளங்க முடியாத பகுதிகளைச் சிதைத்தும் திரித்தும் கோலங் கெடுத்து வெளிப்படுத்தியது வருத்தந் தருகின்றது. இச் செயல் நேர்மையுள்ள எவர்க்கும் அருவருப்பினையுண்டாக்கும். தமிழ்க் கலாசாரமும் தமிழ்ப்பண்பும் இத்தகைய வேண்டாப் பழக்கங்களை நீக்கிக் கொள்ளும். 1941 ஆம் ஆண்டு வெளிவந்த அக்கட்டுரையை எமது ஆசிரியரிடமிருந்து பெற்று இதனேடு அனுப்புகின்றேன்.

க. சிவனடியான்;
ஊர்காவற்றுறை, 15-3-49

**குறிப்பு:** இக்கடிதத்திற் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் ஆட்சேபிப்பதற்கில்லை. கட்டுரைகள் கதைகள் எழுதிப்பத்திரிகைக்கு அனுப்புவோர் பிறருடைய சிருஷ்டிகளிற் கைவைத்துப் பெயர் வாங்குவதாற் பயனில்லை. ப-ர்.

# கடல்நீரிலிருந்து 'பெட்ரோல்'

## 'உவாட்ரோலியம்' தேசீயச் சொத்து

சென்னைவாசி ஒருவர் உலகத்தையே பிரமிக்கவைக்கும் ஒரு அற்புத ஆராய்ச்சியைச் செய்து முடித்திருக்கிருர். கடல் நீரிலிருந்து செயற்கைப் 'பெட்ரோல்' தயார் செய்யும் முறையை அவர் கண்டுபிடித்திருக்கிருர். இந்த முயற்சிக்கு அதிக செலவு பிடியாது என்பது குறிப்பிடத் தக்கது. இதைக் கண்டுபிடித்தவரின் பெயர் **ஸ்ரீ சி. ஆர். பக்தவத்சலம்.** அவர் சென்னை தேசிய ஆராய்ச்சிக் கழகத்தின் அதிகாரியும் ஸ்தாபகருமாவார்.

சென்னை எண்ணெய் உற்பத்திக் 'கம்பெனி' ஒன்றைச் சேர்ந்த ஒரு வெள்ளையர் இந்த முறையைத் தெரிவித்தால், ரூபா 5 இலட்சம் தருவதாகச் சொன்னராம். ஆனல் ஸ்ரீ பக்தவத்சலம் மறுத்துவிட்டார்.

தேசிய ஆராய்ச்சிக் கழக காரியதரிசி ஸ்ரீ எல் எஸ். மணி தமது அறிக்கையில் கூறியதாவது:- இந்தியாவை, ஏன் உலகையே திடுக்கிடும்படியான ஒரு அற்புத ஆராய்ச்சியைச் சென்னை வாசியும், சென்னை தேசிய ஆராய்ச்சிக் கழகத்தின் ஸ்தாபகரும், அதிகாரியான ஸ்ரீ சி. ஆர். பக்தவத்சலம் என்பவர் கண்டுபிடித்து 4-3-49 சென்னையில் உள்ள பிரமுகர்களுக்குப் பகிரங்கப்படுத்தினர். இதைப் பற்றி பிரதம மந்திரி நேருவுக்கு முன்னமே தெரிவித்திருக்கிருர்.

இந்தியாவிற் பெட்ரோல் உற்பத்திக்காக பல வருஷங்களாய் நீண்ட ஆராய்ச்சிகளும், பல லட்ச ரூபாய் செலவுகளும் செய்யப்பட்டன. கடைசியில் முடிவு திருப்திகரமானதாயில்லை. உலகில் எல்லாத் தேசங்களிலும் பெட்ரோல் கிடைக்கவில்லை. சிற்சில நாடுகளிற்றான் பெட்ரோல் கிடைக்கிறது. இதனல் நாடுகள் பிடிக்க மண்ணுசை ஏற்பட்டு யுத்தத்தில் இறங்க வேண்டியிருக்கிறது. இந்தியாவிற்கு வெளிநாடுகளிலிருந்து சொற்ப அளவு பெட்ரோல் தான் இறக்குமதி செய்யப்படுகிறது. கோடிக்கணக்கில் செலவழித்துப் பங்கீடு முறையிற்றான் 'பெட்ரோல்' நம் தேசத்தில்கொடுக்கப்படுகிறது.

இந்தியா வெளிநாட்டு பெட்ரோலுக்கு இனிக் காத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. வெளிநாட்டார் கபட உதவியை உதறித்தள்ளுவோம் என்கிருர் ஸ்ரீ பக்தவத்சலம்."

கடல் நீரிலிருந்து பெட்ரோலை அதிகச் செலவில்லாமல் உற்பத்தி செய்ய முடியும் என்பதை உலகுக்கு வெளிப்படுத்தி விட்டார். இந்திய அரசாங்கத்திடம் இத் திட்டத்தை விளக்கத் தயாராயிருக்கிருர். விரைவில் சென்னை, பம்பாய், டெல்லி, கல்கத்தாவில் **வாட்ரோலியம்** ஆராய்ச்சியை விளக்கி மோட்டார்களை ஓட்டிக்காட்ட ஏற்பாடுநடந்துவருகிறது.

சென்னையில் மந்திரிகள், அதிகாரிகள், பத்திரிகை ஆசிரியர்கள், பிரமுகர்கள், தலைவர்கள், விஞ்ஞானிகள் முன்னிலையில் "உவாட்ரோலியம்" செய்து காட்டப்படும். "உவாட்ரோலியம்" எவ்விதம் தயாரிப்பது, அதன் மூலம் மோட்டார்கள் (பெட்ரோலினல்) என்னென்ன ஓடுகின்றனவோ! அவற்றையெல்லாம் "உவாட்ரோலியத்தினல் பகிரங்கமாய் ஓட்டிக்காட்டுவார். இதற்காக 2000 ரூபாயில் ஒரு ஜலம் இறைக்கும் இயந்திரம்" வாங்கப்பட்டிருக்கிறது. பத்திரிகை ஆசிரியர்களுக்கு அழகிய புட்டிகளில் "உவாட்ரோலியம்" இலவசமாக வைபவத்திற் கொடுக்கப்படும். "உவாட்ரோலியம்" சமுத்திர ஜலத்தைக்கொண்டு தயாரிக்கப்படும். இத்துடன் சில கழிவுப் பொருள்களிலிருந்து கிடைக்கும் சக்கைகள் கலந்து உற்பத்தி செய்யப்படுகிறது. இக் கழிவுப் பொருள்கள் இந்தியாவில் அபரிமிதம். கடல் முப்புறமும் சூழ்ந்திருக்கிறது. நம் நாட்டுக்குத் தேவையான உவாட்ரோலியம் கிடைக்க வழியிருக்கிறது.

"உவாட்ரோலியத்தினல்" மோட்டார்களை அதிக வேகத்துடன் ஓடச் செய்ய முடியும். ஒரு கலன் "உவாட்ரோலியத்தின்" விலை ரூ 0-8-0-க்குக் கொடுக்கமுடியும். ('பெட்ரோலின்' கட்டுப்படுத்தப்பட்ட விலை கலன் ரூ 2-1-6) ஒரு 5 குதிரை சக்தியுள்ள நீர் இறைக்கும் இயந்திரம் பெட்ரோலினல் 4 மணி நேரம் தான் வேலை செய்யலாம். ஆனல் "உவாட்ரோலியத்தி"னல் ஓட்டப்படும் இயந்திரம் அதிகமாக கூட ஒரு மணி நேரம் வேலை செய்கிறது.

ஆவடி, பொன்னேரி, தாம்பரம் இவ்விடங்களில் அரசாங்கம் வசதி செய்துகொடுத்தால் "உவாட்ரோலியம்" உற்பத்தி சாலை நிறுவப்படும்.

"உவாட்ரோலியம்"உற்பத்திக்கு அதிகச் செலவுகிடையாது. உவாட்ரோலியத்தின் மூலம் 'பெட்ரோலி'னல் ஓடும் சகல கருவிகளையும் ஓட்ட முடியும் என்பதை சென்ற 8 வருஷமாக ஆராய்ச்சி செய்து ஸ்ரீ பக்தவத்சலம் முடிவுக்கு வந்திருக்கிருர். "உவாட்ரோலியம்" தயாரிக்கும் முறை இயந்திரம் ஓடும் முறை சகலமும் இம்மாத முடிவில் சென்னை நகரிலில் ஒரு பொதுவைபவத்தில் செய்து காட்டப்படும்.


**தேவை**

## கீரிமலைக் கேணிக் காவலாளர்

1. கீரிமலைக் கேணிக் காவலாளர் வேலைக்கு விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. விண்ணப்பஞ் செய்பவர்கள் 25 வயதுக்கும் 35 வயதுக்கும் இடையேயுள்ளவராயிருத்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தில் வயது, கல்வித் தராதலம், அனுபவம் முதலியவை குறிக்கப்பட வேண்டும். இவைகள் தெல்லிப்பழைக் கிராமச்சங்கத் தலைவரால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் விண்ணப்பகாரரால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு வருவோர் தமது சொந்தச் செலவிலேயே பிரசன்னமாக வேண்டும்.

3. தெரிந்தெடுக்கப்பட்டவர் கீரிமலைக்கேணிக் காவற்பொறுப்பை ஏற்று, தெல்லிப்பழைக் கிராமச்சங்கத் தலைவரிடமிருந்து வரும் கட்டளைப் பிரகாரம் ஒழுகவேண்டும். அத்தோடு அவர் கீரிமலைக் கேணியிருக்கும் பகுதியில் வசிக்கவேண்டும்.

4. சம்பளம்: மாதவீதம் ரூபாய் 35/; வழமைபோல் யுத்தப்படியும் கொடுக்கப்படும்.

5. விண்ணப்பங்கள், **தலைவர், கிராமசங்கம், தெல்லிப்பழை** என்ற விலாசத்துக்கு, **1949-ம் ஆண்டு மார்ச்மாதம் 31-ந் திகதி 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.**

1941-ம் ஆண்டு மார்ச்மாதம் 7-ந் திகதி வெளியான 8722 இலக்க அரசாங்க சமாச்சாரப் பத்திரிகையிற் கிராமசங்கப் பிரமாணங்கள் என்ற தலைப்பின்கீழ்ப் பிரசுரிக்கப்பட்ட சட்டங்களுக்கும், திருத்தப்பட்டவைகளுக்கும், இனிமேல் திருத்தப்படவேண்டிய சட்டங்களுக்கும் அமைவாக உத்தியோகஸ்தர் நடந்துகொள்ள வேண்டும்.

தெல்லிப்பழை
15-3-49
[3642]

**T. V. செல்லப்பா**
தலைவர்
கிராமசங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவில் மங்கல நாள்

## வானொலி — தந்தி வசதி

இத்துணைக் காலமும் தந்தி வசதியில்லாமல் நெடுந்தீவு மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்தார்கள். கடந்த 12-3-49-ல் தபால் தந்திப்பகுதி மந்திரியார் திரு. வி. சிற்றம்பலம் அவர்கள் நெடுந்தீவுக்கு விஜயம் செய்து இத் தந்தியை ஆரம்பித்து வைத்தார். அவருடன் பாராளுமன்றத் தபாற் பகுதிக் காரியதரிசி கனம். ஜயசூரியா, தீவுப்பகுதிப் பிரதிநிதி திரு. ஏ. எல். தம்பிஐயா, சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. குமாரசாமி தபாற்கந்தோர்த் தலைமை அதிகாரி என்பாரும் மற்றும் உத்தியோகஸ்தர் பலரும் விஜயஞ் செய்தனர். பொது சனங்களின் சார்பாகச் சிறந்த வரவேற்புகளும் பொதுக் கூட்டமும் நடத்தப்பட்டன. சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட அரசினர் ஆங்கில பாடசாலையில் அதன் தலைமை ஆசிரியர் எற்வேட் நவரத்தினசிங்கம் அவர்களின் தலைமையில் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

தலைவர், நெடுந்தீவின் தபால் தந்தி வசதியீனங்களால் ஏற்பட்ட கஷ்டங்களை விளக்கி தற்போதும் உள்ள பிரயாணக் கஷ்டங்களையும், கல்விவசதியீனத்தையும் குறிப்பிட்டு இவற்றுக்கும் அரசினர் உடன் கவனஞ் செலுத்தவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. குமாரசுவாமி அவர்கள் மந்திரியாரின் அறிவு நுட்பம், மனத்திடம் வேலைத்திட்டம் என்பவற்றையும் தீவுப் பிரதிநிதியாரின் பல கட்சி நேசத்தையும் பாராட்டினார். நெடுந்தீவினதும் மக்களதும் சிறந்த பண்பாடுகளை முன்கேள்வியுற்றதுமன்றி இன்று கண்டுவிட்டதாகவும் யாழ்ப்பாணத்தின் பெருமைக்கு தீவுப் பகுதியே முக்கிய உதவியென்றும், தீவு மக்களின் வாழ்க்கை சிறப்புடையதென்றும் குறிப்பிட்டார்.

தீவுப் பிரதிநிதி ஸ்ரீ தம்பிஐயா அவர்கள் தாம் பிரயாண வசதிகள் இத் தீவின் காணிப் பங்கீடு, மீன்பிடிதொழிலாளருக்கு வீடமைப்பு என்பவற்றிலும் கவனஞ் செலுத்திவருவதாகக் குறிப்பிட்டுத் தமது நன்றியைச் செலுத்தினார்.

மந்திரியார், சுதந்திர இலங்கையிலே மக்கள் சுகமாக வாழ வசதிகளைச் செய்வதே பொதுசனங்களாற் பதவியடைந்த தங்கள் கடன் என்றும் எல்லாவற்றையும் உடனே நிறைவேற்ற முடியாதென்றும் இன்னும் இத் தீவு மக்களுக்குரிய விடயத்திற் கவனஞ் செலுத்துவதாகவுங் கூறித் தமது நன்றியைத் தெரிவித்தார். கிராம விதானை சு. நாகேந்திரர் அவர்கள் சமத்துக்குரிய நில வசதியைச் செய்து தரவேண்டுமெனவும் மீன்பிடித் தொழிலாளருக்கு விரைவில் உதவிசெய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

அதன்பின் பிற்பகல் $1\frac{1}{2}$ மணியளவில் தபால் நிலையத்தில் அதன் தலைவர் திரு. செ. கனகநாயகம் அவர்களால் சிறந்த வரவேற்பளிக்கப்பட்டது.

சில தினங்களுக்கு முன் தபாற் கந்தோர்த் தலைமை அதிகாரி இங்கு வந்தபொழுது ஒரு வருடத்துள் இத்தந்தி வசதியைச் செய்து கொடுப்பதாகக் கூறினார். மக்களின் உண்மையான கஷ்டத்தைக் கண்டு ஒரு மாசத்துள்ளேயே செய்து கொடுத்த மேலதிகாரி ஸ்ரீ பெரோரா அவர்களின் முயற்சி பாராட்டற்பாலது. கடந்த மார்கழிவரை ஒரு உப தபாற் கந்தோர் மாத்திரம் இருந்தது. ஒரு தபாற்காரனே நியமிக்கப்பட்டிருந்தார். மார்கழி முதல் கந்தோராக உயர்த்தப்பட்டு அது இத்தந்தி வசதியையும் பெற்றது ஆத் தீவு மக்களுக்குப் பெரியதோர் ஆறுதலாகும்.

ஆழ்கடலின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு அல்லலுற்ற மக்கள் இன்று வானவெளிவழியே தொடர்புற்ற இத்தினம் ஒரு சுபதினமாகும். அது நெடுந்தீவின் சரிதத்தில் முக்கியம் வாய்ந்தது.

—கடிதம்.

### வட இலங்கைத் தீவக சமாசம் நெடுந்தீவுக் கிளை

வானொலித தந்தியை அங்குரார்ப்பணஞ் செய்துவைக்கக் கடந்த 12-3-49-ல் தபால் தந்திப்பகுதி மந்திரியாரும் ஏனையோரும் நெடுந்தீவுக்கு விஜயம் செய்தனர். அவர்களை மேற்படி கிளைச் சபையினர் வரவேற்று வாழ்த்துப்பத்திரம் வாசித்து வழங்கினர். அதில்,

(1) D. R. C.யில் இருக்கும் முக்கிய தெருக்களை P.W.D.க்குக் கொடுக்கவேண்டும்.
(2) ஆங்கில பாடசாலைக்கு நிரந்தர கட்டிடம்,
(3) பனங்காணித் துறைமுக வசதி.
(4) இன்னும் ஒரு அரசினர் புதைவன்ளம்.
(5) வேலையற்றோருக்கு நிவாரணம்.

என்பன வேண்டப்பட்டுள்ளன.

—கடிதம்

### மந்திரி திரு. சிற்றம்பலம் மீது அவரது சகோதரர் கண்டனம்

"மந்திரியின் கீழுள்ள அதிகாரிகள் வரவேற்பொன்று அளிப்பதற்காக மந்திரிக்கு அழைப்பு அனுப்புகிறார்கள். இந்த அழைப்பை யேற்றுக்கொள்ளும் ஒரு மந்திரி தமது மனச்சாட்சியின்படி கடமைகளைச் செய்து தமது கீழுள்ள அதிகாரிகளைக் கட்டுப்படுத்தமுடியுமா" என்று திரு. வி. பொன்னம்பலம் ஹரிஜனங்களுக்குச் சேமாபிவிருத்தி நிலையமொன்று அமைப்பதற்காக நடத்தப்பட்ட ஹரிஜனங்களின் கூட்டமொன்றுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிற் கூறினார்.

வடபகுதித் தபால் பிரிவின் பொழுதுபோக்கு நிலைய அங்கத்தவர்களால் ஞாயிற்றுக்கிழமை மாலை நகரமண்டபத்தில் தபால் தந்தி இலாகா மந்திரி திரு. சிற்றம்பலத்துக்கு ஒரு விருந்து அளிக்கப்பட்டது. திரு. பொன்னம்பலம் பேசும்போது இது சம்பந்தமாகவே தனது சகோதரர் திரு. சிற்றம்பலத்தைச் சுட்டிக்காட்டி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:— "பள்ளிக்கூடங்களிலிருந்து இன்று வெளியேறியுள்ள வாலிபரிடையே பெருமை யோக்கியதையின்மை முதலிய தீய குணங்கள் காணப்படுகின்றன. இந்நாட்டின் வாலிபரின் குணங்களை இந்தசேமாபிவிருத்தி நிலையம் செப்பனிட வேண்டும்.

### விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 3203-ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் 1949-ம் ஆண்டு பங்குனி மாதம் 9-ந் திகதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் 1949-ம் ஆண்டு சித்திரை மாதம் 25-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிவரையில் அந்தக் காணிக்குள் நின்று முதலாவதாக மதிப்பின்படி காணிப் பங்காளருக்குள்ளும் பங்காளர் கேள்விக்காரராக இல்லாவிட்டால் மறுபேர்களுக்கிடையிலும் அதி உயர்ந்த கேள்விக்காரனுக்கும் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**விபரம்**

புலோலிகிழக்கு
1. ச. கதிர்காமு மாசிலாமணியும்
2. பெண் இரத்தினம்

வழக்காளிகள்

ஷை யூர்
1. தம்பையா நடராசாவும்
2. பெண் சகுந்தலையும்

எதிராளிகள்

**ஆதனம்:**

புலோலி கிழக்கு மழவராயகுறிச்சி யிறை, செட்டிசீமா, நிலைப்பரப்பு $6\frac{1}{8}$ ஷை தோட்டம் $\frac{1}{2}$. இதில் ஆட்சிப்படி சிந்தமான நிலைப்பரப்பு 4. இதில் ஆட்சிப்படி தெற்குப்புறமாக $\frac{7}{32}$ பங்குக்கு சிந்தமான குளி 15. வீடு அடுக்களை கொட்டில்களும் எல்லை: கிழக்கு வயிரவியார் சிவப்பிரகாசத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு கணபதிப்பிள்ளை பெண் முத்துப்பிள்ளைக்கு மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு ரோட்டு; தெற்கு வல்லிபுரம் இராசரத்தினத்துக்குடைய ஆதனம். இது முழுவதும் முழுக்காணிக்குட்பட இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலுரித்தும். இது 1948-ம் ஸூ கார்த்திகை மீ 20ம் திகதி உலாந்தா V. சிவரத்தினத்தால் 648-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டு இந்தவழக்கில் அணைபட்டிருக்கும் படத்தில் "A" என்ற துண்டு பெறுமதி ரூபா 2000.

S. C. Kanagasabai.
கொம்மிஷனர்,
புலோலி கிழக்கு
12-3-1949
[3638]

### மட்டுவிற் கொலை வழக்கு எதிரிகள் விடுதலை

கத்திகள், பொல்லுகள், கற்கள், வாட்கள் முதலிய ஆயுதங்களுடன் சட்டவிரோதமாகக் கூட்டம்கூடி மட்டுவில் வடக்கு வாசியாகிய சின்னத்தம்பி பொன்னன் என்பவரைக் கொலை செய்தார்களென்று அதே கிராமத்தைச் சேர்ந்த திரு. எஸ். ஆறுமுகம் என்ற ஆசிரியர்மீதும் எஸ். நவரத்தினம் என்ற மாணவன் மீதும் மற்றும் 9 பேர்மீதும் குற்றஞ்சாட்டி ஒரு வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

எதிரிகள் குற்றவாளிகளல்ல வென்று ஜூரர்கள் ஏகமனதாகத் தீர்ப்பளித்தனர். நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார்.

### பிரதிநிதி குடும்பத்தினர் 'சிராவஸ்தி' யில் தங்கலாம்

தற்சமயம் பாராளுமன்ற அங்கத்தவர்களால் உபயோகப்படுத்தப்பட்டுவரும் 'சிராவஸ்தி' என்னும் விடுதிச்சாலையில் இனிமேல் அவர்களின் மனைவிகளும் குழந்தைகளும் தங்க அனுமதிக்கப்படுவார்கள்.

சபைத்தலைவர் திரு. ஏ. எவ். மொலமுரே இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 4804

நீர்வேலி, 1. சின்னப்பு செல்லப்பா
2. பெண் கனகமுத்து

வழக்காளிகள்.

எதிராக

நீர்வேலி, மினுயர் பொன்னுத்துரை தானுகவும் காலஞ்சென்ற மினுயர் கைம்பெண் சின்னம்மாவின் ஆஸ்திக்குப் பிரதி காரியஸ்தராகவும், எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 4804-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை, 1949-ம் ஆண்டு ஏப்றில் (சித்திரை) மாதம் 9-ந் திகதி (9-4-49) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை**:—முதல் வட்டி ரூபாய் 1034-90-ம், இதில் ரூபாய் 80.-00-க்கு 1-9-48-ந் திகதி தொடக்கம் 1-11-48-ந் திகதி வரைக்கும் 100-க்கு $6\frac{1}{2}$ வீத வட்டியும், பின திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 246-08 சதம்.

**காணியின் விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய்க் கோவிற்பற்று நீர்வேலியிறை "சில்லலயம் கலட்டி" நிலைப்பரப்பு மூன்றரை ($3\frac{1}{2}$-ம்) கல்வீடும் செய்பயிர்களும் எலைகளில் நிற்கும் வான்பயிர்களிற் பங்கும் வடக்கெல்லையில் இருக்கும் கிணற்றிற் பங்கும். எல்லை கிழக்கு துரையப்பா சிவகுருநாதனின் ஆதனம். வடக்கு வேலாயுதம் கைம்பெண் தெய்வானைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு சின்னப்பு கந்தையாவின் ஆதனம். தெற்கு வேலாயுதம் கதிரவேலுவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதுடன்கலும் இன்னும் வடக்கெல்லைக் காணியின் கிழக்கெல்லையருகாக இக் காணிக்காக விடப்பட்ட ஆறுமுழ அகலமுள்ள ஒழுங்கைப் பாவிப்புரித்தும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner &
Licensed Auctioneer
தெல்லிப்பழை
12.3.1949
[3641]

### தமிழ்க்கலைத் தகுதிக்கல வகுப்புப் புகுமுகத் தேர்வு

[ Tamil Diploma Entrance Examination ]

இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்க்கலைத் தகுதிக்கல வகுப்பின் புகுமுகத் தேர்வு 1949-ம் ஆண்டு மே திங்கள் 5-ம் நாள் நடைபெறும். மேற்படி தேர்வுக்கு விண்ணப்பிப்போர் 1949-ம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 5-ம் நாளுக்குப் பிந்தாது தமது விண்ணப்பத் தாள்களை நிரப்பி எமக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். குறித்த நாளுக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேற்படி புகுமுகத்தேர்வு ஓர் எழுத்துத் தேர்வையும் ஒரு நேர்முகத்தேர்வையும் கொண்டதாயிருக்கும். எழுத்துத் தேர்வு பின்வரும் இருவகை வினுத் தாள்களை உடையது.

(i) முதலாவது வினுத்தாளில்:
(அ) தமிழில் ஒரு கட்டுரை வரையும்படியும்
(ஆ) தமிழ் நூல்களைப் பற்றியும் அவற்றை ஆக்கியோரைப் பற்றியும் தேர்வுக்குத் தோற்றுவோர் கொண்டுள்ள அறிவை அளக்குமுகத்தால் தமிழ் இலக்கிய வரலாறு தமிழ் நாகரிகம் பண்பாடு முதலியன பற்றிய பொதுக் கேள்விகளுக்கு விடை இறுக்கும்படியும் கேட்கப்படும்.
(ii) இரண்டாவது வினுத்தாளில்:
இலக்கணம் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்தல், நயந்தெரிதல் ஆகியவை பற்றிய வினுக்கள் இடம்பெறும்.

இலங்கைக் கல்விப் பகுதியார் நடாத்தும் ஆங்கில பள்ளி இறுதித் தேர்தலில் (S.S.C.) அல்லது காம்பிரிச்சு பள்ளி இறுதித் தேர்தலில் (Cambridge Senior) அல்லது இலங்கைப் பல்கலைக் கழகத்துக் கலைமுறை கூறவையத்தார் (Senate) இதற்கென ஒப்புக்கொண்ட வேறொரு பல்கலைக் கழகத்தின் புகுநிலைத் தேர்விலோ (Matriculation) புகுமுகத் தேர்விலோ (Entrance) அல்லது அவற்றிற்கு மேற்றரமான தேர்விலோ தேர்ச்சி அடையாதவர் மேற்காட்டிய வினுத தாள்களுக்கு மட்டுமன்றி ஆங்கில வினுத் தாள் ஒன்றிற்கும் விடை எழுதுதல் வேண்டும்.

மேற்படி தேர்வுக்குரிய விண்ணப்பத் தாள் பல்கலைக் கழகச் செயல் நிலையத்தினின்று பெறற்பாலது.

(Sgd.) A. M. K. Cumaraswamy
பதிவாளர்.

இலங்கைப் பல்கலைக் கழகம்
கொழும்பு, 15-3-49
[3640]

### கல்லோயாவில் ஆரம்ப வேலைகள்

கல்லோயாத் திட்ட வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இவ்வேலையை ஒப்பந்தமெடுத்து நடத்தும் மொரிசன் நட்ஸன் 'கம்பெனி'யைச் சேர்ந்த 70 அமெரிக்க என்ஜினீயர்களிலும் சுமார் 20 பேர் அவ்வேலையிலீடுபட்டிருக்கிறார்கள்.

இந்தத் திட்டம் பெரும் வெற்றியையளிக்கக் கூடியதாக இருக்குமென்றும் நாட்டுக்கு அதனுற் பெரும் நன்மையேற்படுமென்றும் அவர்கள் பத்திரிகைநிருபர்களுக்குத் தெரிவித்தார்

கல்லோயா அணைக்கட்டுக்குச் செல்லும் வீதியின் பெரும்பகுதிபூர்த்தியாய்விட்டது.

கல்லோயாவுக்குச் செல்லும் வீதியிற் பெரிய பாலத்தைக் கட்டும் வேலை ஆரம்பமாகிவிட்டது,

# யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்

**தினசரிப் பற்று வரவு:**
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத் தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[3620]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மருமக்களே!

வணக்கம். இம்முறை உங்களுக்குப் பபிலோனியரின் பழைய நாகரீகத்தைப்பற்றிக் கூறப்போகிறேன்.

பபிலோனியரின் நாகரிகம் எகிப்தியருக்கு முற்பட்டதென்றே கூறவேண்டும். கி. மு. 6000 வருஷங்களுக்கு முன்னரே பபிலோன் சிறப்புற்று விளங்கியது. நாலு சாதியினர் ஒருவர்பின் ஒருவராய் ஆதிக்கம் செலுத்திவந்தனர். முதலாவதாகத் திராவிடரின் முற்சந்ததியாரெனக் கருதப்படும் சுமேரியர் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் 3000 வருஷமளவில் ஆட்சி புரிந்து வந்தனர். பின்னர் ஈளமைற்ஸ், அமோறைற்ஸ் என்ற சாதியினர் ஆண்டு வந்தனர். ஹமுரபி என்னும் அரசன் அமோறைற்ஸ் சாதியினரே. கடைசியாக வந்தவர்கள் அசீரியர் ஆவர்.

பபிலோனியாவிலே யூபிறெட்டிஸ், டைகிரிஸ் என்னும் இரண்டு நதிகள் உள்ளன. இப்பொழுது இவ்விரு நதிகளும் கூடி ஓர் ஆறாகக் கடலிற் பாய்கின்றன. வெகு காலமாக இந்த நாட்டை மெஸபொத்தேமியா என அழைத்து வந்தனர். இரு நதிகளுக்குட்பட்ட நாடென்பது இதன் கருத்து. இப்போது இந்நாடு இருக் எனவழங்கப்படுகிறது. இங்கேதான் கோதுமை தானாக முளைத்ததெனச் சரித்திரம் கூறுகின்றது.

இங்குள்ள நகரங்களுள் பிரதானமானது நிப்பூர், என்னும் நகரமே. முதல வந்த சுமேரியரிடத்தில் இரு குற்றங்கள் காணப்பட்டன. ஒன்று ஒற்றுமையில்லாதது. மற்றது மேபார் முறைகளிற் தேர்ச்சியடையாதது. இவ்விரண்டு காரணங்களுந்தான் இவர்களின் வீழ்ச்சிக்கு ஏதுவாகவிருந்தனர்.

பபிலோனியர் சமயப் பற்றுள்ளவர்கள். குருமாரை மரியாதையுடன் நடத்திவந்தார்கள். இவர்கள் பல தேவதைகளை வணங்கினர். மார்டக் என்பவரைத் தேவர்களின் அதிபரென மதித்தார்கள். இவர்களின் அன்புக் கடவுள் இஷ்டர். இவர்களுடைய கோயில்கள் உயர்ந்த கோபுரங்களையுடையன. பக்தர்கள் உயரமான இடங்களிலிருந்து வணங்கினால், வானத்துக்குச் சமீபமாக இருப்பதாக நினைப்பார்களாம். இவர்கள் 'டசின்' கணக்காக எண்ணுவதிற் பிரியமாயிருந்தார்கள். ஆகையால்தான் வருஷத்தைப் பன்னிரண்டு மாதங்களாகவும், ஒரு நாளை 24 மணித்தியாலங்களாகவும் பிரித்துவந்தார்கள்.

சூரியனின் போக்கால் நேரம் அளக்கும் கடிகாரத்தை இவர்களேமுதன்முதல்உலகுக்குஅளித்தனர். எகிப்தியர் நிலத்தை அளக்கக் கற்றறிந்தது போல் பபிலோனியர் வானத்தை அளக்கக் கற்றறிந்தனர். எந்த வேளையிற் கிரகணம் நடைபெறும் என்பதைக் கணக்கிடுவதிலும் சாமர்த்தியமுள்ளவர்களாயிருந்தனர். எதிர்காலப்பலன்களை நட்சத்திரங்களின் மூலம் அறியலாம் என்றும் நம்பினர்.

பபிலோனியரின் சக்கரவர்த்திகளுள் பேர்போன சக்கரவர்த்தி ஹமுரபி. இவர் கி. மு. 2000 வருஷங்களுக்குமுன் ஆட்சி புரிந்து வந்தவர். இவர் சிறந்த நீதிச் சட்டங்களைத் தயாரித்து வெளியிட்டார். அசோக மன்னன் செய்தது போல இவரும் இச்சட்டங்களை 8 அடி உயரமுள்ள ஒரு கற்றூணில் எழுதி வைத்தார். ஒரு வீடு இடிந்து விழுந்தால் அவ்வீட்டைக் கட்டியவன் தண்டனை பெறவேண்டுமென்பதுவேசட்டம். ஆனால் அவை அக்கால நீதிமுறைக்கேற்றதாகயிருந்தன.

இக்காலத்திலே ஆட்டு உரோமங்களிலிருந்து கம்பளித்துணிகளை ஆக்கினர்கள். பபிலோன் நகரமதிலின் மேல் ஐந்து இரதங்கள் பக்கம் பக்கமாகப் போகக்கூடிய அகலமுள்ளதாயிருந்தது.

பபிலோனியரும் கல்வியில் விருப்பமுடையவர்களாயிருந்தனர். இவர்களுடைய எழுத்துக்கருவிகள் களிமண்ணும் எழுத்தாணியுமே. இவர்களுடைய எழுத்துக்களை ஆப்பெழுத்துக்கள் எனக்கூறுவர். பபிலோனியதேசத்தில் அநேகம் பள்ளிக்கூடங்களும் இருந்தனவாம். இப்பள்ளிக்கூடமொன்றை 1894-ம் ஆண்டில் பிரெஞ்சு சரித்திர ஆராய்ச்சியாளர் ஒருவர் கண்டறிந்தாராம்.

3000 வருஷங்களுக்கு முன்னர் அசீரியர் பபிலோனியா மீது படையெடுக்கத் தொடங்கினர். இரண்டொரு நூற்றூண்டின் பின்னர் அத்தேசத்தைக் கைப்பற்றினர். அசீரியருக்குப்பின் சல்டியச் சாதியர் ஆண்டுவந்தார்கள். அரசர்களில் ஒருவனாகிய நெபுசுட்நெசார் என்பவன்தான் அற்புதமான தொங்கு தோட்டத்தை உண்டுபடுத்தினன். இவனே யூதரையும் சிறைப்படுத்தினன.

பின்வந்த சாதியார் முன்னிருந்த சாதியாரைப் பின்பற்றி நாகரீகத்தை வளர்ச்சியடையச் செய்து வந்ததால் பபிலோன் தேச நாகரீகம் சீர்குலையாமல் ஓங்கி வளர்ந்தது.

அடுத்தவாரம் சீன தேச நாகரீகத்தைப்பற்றி எழுதுவேன். இக்கட்டுரைகளை வாசிப்பதால் உங்களுக்கு ஏதாவது நன்மை பயக்கின்றதா? வணக்கம்.

கேசரி மாமா

## தெரிந்ததா?

1. காய்த்தால் அல்லது பூத்தால் பட்டுப்போகும் தாவரங்கள் எவை?
2. மகாவமிசமெனும் சிங்கள இதிகாசம் எவ்வரசன் காலத்தில் எழுதப்பட்டது.
3. கொள்ளிவாய்ப் பேயென்பது என்ன?
4. ஊர்காவற்றுறைக் கடற்கோட்டை யாராற் கட்டப்பட்டது?
5. நவக்கிரியிலுள்ள . நிலாவரையின் விசேஷமென்ன?
6. நாய் எத்தனை மாதத்தில் குட்டி ஈனும்?
7. சிவனொளிபாத மலைக்கு வேறு பெயர்கள் யாவை?

## மாமா பதில்

செ. அகமது, மே.263: உம்மை என் மருமகனாக்கியிருக்கிறேன். உமது கட்டுரை கிடைத்தது.

பூ. பாலசுப்பிரமணியம், மே.34: உம்மைப்போலவே எல்லாரும் எழுதிவருகிறார்கள். பலநாளாக விஷயதானம் செய்யாததை இட்டு மன்னிக்கவும் என்று எழுதியிருக்கிறீர். மன்னித்துவிட்டேன். இனிமேலாவது பார்ப்போம். உமது கவிதை கிடைத்தது. நன்றாயிருக்கிறது. "உவர்ப்புள நட்பு" எப்போது பிரசுரமாகுமென்று திடமாகச் சொல்லமுடியாது.

சி. சரவணபவன், மே.:56: மருமகனே, பாலர் பகுதியில் இன்னுமொரு சரவணபவன் இருக்கிறார். இலக்கத்தை மாறியெழுதியிருக்கலாம் என்றே எண்ணுகின்றேன். தனிப்பத்திரிகை நடாத்துவது இப்போது இயலாத காரியம். இருபக்கங்கள் ஒதுக்குவதும் முடியாதகாரியம். உமது கவிதைகள் கிடைத்தன.

சி. செல்வானந்தன், மே.197: உமது சிறுகவிதை கிடைத்தது. உமது முதற் கேள்விக்குத் தகுந்த பதில் கொடுப்பதற்குப் பாலர் பகுதி இடங்கொடாது மருமகனே. ஆகையால் 5 சத முத்திரையொன்று அனுப்பிவைத்தால் நேரே பதில் கொடுப்பேன். மணம் முடியாதவர்கள் குங்குமப் பொட்டிடுவதும், பொட்டிடாததும் உலக சம்பிரதாயமேயொழிய வேறொன்றில்லை மருமகனே.

லோ. மாகறற், மே.16: மே.34க்குக் கொடுத்த பதிலையும் வாசித்துப்பாரும். உமது கட்டுரை கிடைத்தது. மருமகளே!

இ. பிராணநாத்திகரசர்மா, கீ.203: உமது கட்டுரை கிடைத்தது.

சி. சிவசாமி, மே.264: உம்மை என் மருமகனாக்கியிருக்கிறேன். உமது சிறுகவிதை கிடைத்தது.

வேத. தணிகாசலம், மே.9: பத்திரிகை அனுப்பும்படி சொல்லியிருந்தேன். மறதிகாரணமாக அனுப்பாமலிருந்திருக்கலாம். எதற்கும் கேட்டுப்பார்க்கிறேன்

வி. சுப்பிரமணியம், [illegible] கிடைத்தன.

## டி. எஸ். சேனநாயகா

சோல்பரி அரசியல்திட்டத்தின்கீழ் இலங்கையின் முதற் பிரதமராக இன்று விளங்கும் திரு. டொன் ஸ்டீபின் சேனநாயக்காவைப் பற்றிச் சொல்வதற்கு அதிகமாக ஒன்றும் இல்லாவிட்டாலும் அவர் ஒரு கண்ணியம்வாய்ந்தவர் என்பது மட்டும் உண்மை.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக அரசியலில் ஈடுபட்டிருந்தபோது தம்மை எதிர்த்தவர்களை தமது சாதுரியத்தாலே தோற்கடித்து வந்தார். அல்லாமலும் உத்தியோகத்தில் ஒவ்வொருபடி உயர்ந்து வந்த காலங்களில் தமது திறமையைக் காட்டிச் சினேகிதர்களையும் மற்றையோரையும் பிரமிக்கச் செய்தார். அந்தக் காலத்தில் அவருக்கு இருந்த அரசியல் அறிவு மிகச் சொற்பமாயிருந்தும், அரசியலிற் புகுந்து இவ்வளவு பெருமையடைந்தது கிரகங்களின் நன்மையென்றும் சொல்லுகிறார்கள்.

தென்னந்தோட்டம், மின்னரம் மற்றும் நிலபுலங்களெல்லாம் படைத்த முதலியார் சேனநாயக்காவின் மூன்றாவது குமாரனே இவர். இளம் பிராயத்தில் கணிதத்திற்குப் பதிலாக 'கிரிக்கெட்' விளையாட்டையும், புத்தக வாசிப்புக்குப் பதிலாகக் குதிரைச் சவாரியையும், குஸ்தி போன்ற விளையாட்டுக்களையும் விரும்புவாராம்.

ஒரு முறை இவருடைய தகப்பனார் இவரை வகுப்பில் எத்தனையாம்பிள்ளை என்று விசாரித்தபொழுது 4-ம் பிள்ளை என்று தயக்கமின்றிச் சொன்னார். தபால் மூலம் பரீட்சை அறிக்கை வந்ததும் தகப்பனார் பிரித்துப் பார்த்தார். ஆம் 4-ம் பிள்ளை தான். ஆனால் வகுப்பில் உள்ள பிள்ளைகளின் மொத்தமும் நாலுதான். சில அளவைக் கந்தோரில் ஒரு லிகிதராக சில காலம் இருந்தார். ஆனால் அவருடைய மனம் நாட்டுப் புறங்களிலே தான் அலைந்தது. ஆகவே தங்கள் குடும்பத் தோட்டத்திற்கு மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டார். சுரங்க அலுவல்களில் அதிகம் அனுபவம் ஏற்பட்டதால் 1914-ம் ஆண்டு இரு சுரங்க நிபுணர்களோடு மடகாஸ்கார் என்னும் இடத்திற்கு இவரும் அனுப்பப்பட்டார். அப்பொழுது அரசியலிலும் ஒரு அளவுக்கு மனம் ஈடுபட்டது.

1915-ம் ஆண்டு முஸ்லிம்களுக்கும் சிங்களருக்குமிடையே ஏற்பட்ட கலகத்தில் இவரும் சிறிது பங்கெடுத்துக் கொண்டபடியாற் சிறைச்சாலைக்கு உள்ளே பூட்டப்பட்டார். பின் வெளியே வந்தபோது தம்முடைய பெயரும் பொதுமக்களிடையே அடிபடுவதைக் கண்டார். அரசியல் அவரைத் தேடிச்சென்றதொழிய அவர் அரசியலைத் தேடிச் செல்லவில்லை. சட்டநிரூபணசபையில் டி. எஸ். சேனநாயகாவுக்கு இடம் கிடைத்தது. அப்பொழுது அவர் பள்ளிக்கூட நாட்களில் தள்ளிதகிருந்ததை எல்லாம் ஈடு செய்வதற்காக இராப்பகலாகப் படித்தார்.



1926-ம் ஆண்டு அவருடைய தகப்பனாரும் காலமானார். ஆகவே அரசியல், டி. எஸ். சேனநாயகாவின் கையிலேயேதங்கிவிட்டது. 1931-ம் ஆண்டு விவசாய மந்திரியாகப் பதவி யேற்றார். பாழடைந்த பழைய குளங்களை யெல்லாம் புதுக்குவித்தார். அன்று பரந்த காடாய்க்கிடந்த நிலங்களெல்லாம் இன்று கதிர் தாங்கிய நெல் வயல்களாய்க்கிடக்கின்றன. 12-ம் நூற்றூண்டில் பெரிய குளங்களை வெட்டுவித்த அரசன் பராக்கிரமவாகு மறுபடியும் அவதாரம் எடுத்து இவற்றை யெல்லாம் ஆக்குவித்தானோ என்று கூட எண்ண இடமுண்டு.

படிப்படியாக அவருடைய பேச்சுவல்லமையும் முன்னேறியது. சமயோசித புத்தியும் பொலிவுற்றது.

டி.எஸ். எஸ்.கெட்டித்தனத்தாலும், சினேகபான்மையாலும், மற்றவர்களைத் தட்டிக்கொடுப்பதாலும் தமது எதிரிகளைத் தன்வசப்படுத்தினர்.

இப்போது அவருக்குவயது 65. அவர் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக.

### பிறந்ததின வாழ்த்துக்கள்

**20-3-49 — 26-3-49**

கீ.3. அ. சந்திரா; மே.22. செ. விசாலாட்சி; மே.25. ப. பெனடிக்ற்; மே.118. ஆ. பாலகிருஷ்ணன்; கீ.128. க. சிதம்பரநாதன்; மே.244. அ. குமாரசாமி.

●

மேற்குறித்தஎனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வார்களாக.

### மருமக்கள்

மே.263: செய்யது அகமது, அரசினர் கனிஷ்டபாடசாலை, கற்பிட்டி; மே.264: சின்னத்தம்பி சிவசாமி, நாவற்காடு, அச்சுவேலி.

### பதில்

1. வாழை, தளப்பத்து, மூங்கில் கரும்பு.
2. தாதுசேனன் காலத்தில்.
3. 'மெதேன்' என்னும் ஒருவகை வாயு எரிவது.
4. போர்த்துக்கேயரால்
5. வற்றாத கிணறு, மேலே சுத்தமான நீர், ஆழத்தில் உப்புநீர், இன்னும் ஆழத்தில் கெந்தகம் கலந்த நீர்.
6. மூன்று மாதத்தில்
7. ஆதாம்தலை, பாதபங்கயம், சிபாதம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யா. ஆ. தி. பா. வி. சங்கப் பாடவிதானம் 1949-50

[27-8-48ல் பாடவிதானச் சபையாரால் அங்கீகரிக்கப்பட்டது]

**பரீட்சை :** செப்டம்பர்மாதம் இரண்டாம் வாரம் நடைபெறும்.

**விண்ணப்பங்கள் :** முடிவு தேதி ஜூலை மீ 31-ந் திகதி. **பிந்திய விண்ணப்பங்கள்:** ஒகஸ்ட் மீ 31-ந் திகதி

## பரீட்சைப் பாடவிதானம்—தமிழ்

## பிரவேச பரீட்சை

### பாடவகை I

**இலக்கியம் I** அமிசம் 150

1. மதுரைக் கலம்பகம்.
2. முக்கூடற் பள்ளு.
3. கல்வளை யந்தாதி.
4. நால்வர் நான்மணிமாலை.
5. கச்சியானந்தருத்திரேசர் வண்டுவிடு தூது.

**இலக்கியம் II** அமிசம் 150

6. நாலடியார் : 1—10 அதிகாரம்.
7. நளவெண்பா . சுயம்வரகாண்டம்.
8. வில்லிபுத்தூராழ்வார் பாரதம் : அருச்சுனன் றவநிலைச்சருக்கம்.
9. திருவாதவூரடிகள் புராணம் : (ஆசிரியர், ம. க. வேற்பிள்ளையுரையுடன்) பாயிரம் முதல் திருப்பெருந்துறைச்சருக்கம் முடிய.
10. ஆறுமுகநாவலர் நான்காம் பாலபாடம் : வசன பாகம்.

### பாடவகை II

**இலக்கணம் I** அமிசம் 125

1. நன்னூற் காண்டிகையுரை (நாவலர் பதிப்பு)
2. இளைஞர் தமிழிலக்கணம் 2-ம் பாகம்: V. வேங்கடராஜுலு ரெட்டியார், சென்னைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் இயற்றியது; S. வாசன் புத்தகசாலை, மயிலாப்பூர், சென்னை.

**இலக்கணம் II** அமிசம் 75

3. யாப்பிலக்கண வினுவிடை : விசாகப்பெருமாளையர் இயற்றியது.
4. அணியிலக்கணச் சுருக்கம் : ,, ,,

### பாடவகை III

**கட்டுரை எழுதல்** அமிசம் 100

### பாடவகை IV

அமிசம் 100

பின்வரும் நான்கு பகுதியுள் ஏதாவதொன்று எடுக்கலாம்.

**i சம்ஸ்கிருதம்**

சம்ஸ்கிருதப் பிரதமாதர்சமும், துவிதியாதர்சமும் : (S. Subramanya Vadhyar, Bookseller, Kalpathi, Palghat.)

**ii சரித்திரம்**

1. ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம் . (வட-இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், சுன்னாகம் )
2. கதிர்காமம் : (முதலியார் குல. சபாநாதன் இயற்றியது )
3. இலங்கையின் பூர்வீக சரித்திரம் : (by C. மெண்டிஸ்)

**iii செய்யுளியற்றல்**

வெண்பாவும், ஆசிரியப்பாவும்.

**iv சிங்களம் :** மொழிபெயர்த்தல்.

நவீன சிங்கள கதாவாசகங்கள் : 1—4 பாகங்கள்.
(ஆக்கியோன் : பலபோவே வாகீஸ்வா ஆனந்த ஸ்ரீசுமன புத்த குரு, யாழ்ப்பாணம்.

---

## பாலபண்டித பரீட்சை

### பாடவகை I

**இலக்கியம் I** அமிசம் 150

1. பத்துப்பாட்டு : திருமுருகாற்றுப்படை – நச்சினார்க்கினியருரையுடன்.
2. ஐங்குறுநூறு : குறிஞ்சித்திணை. (யா. ஆ. தி. பா. வி. சங்கப் பதிப்பு )
3. திருக்குறள் : அறத்துப்பால் – பரிமேலழகருரையுடன்.
4. மணிமேகலை : 1—10 காதை.
5. சூளாமணிச்சுருக்கம் : 1—4. (தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் உரையுடன்).

**இலக்கியம் II** அமிசம் 150

6. கம்பராமாயணம் : பாலகாண்டம் – காப்பு முதல் கார்முகப்படலம் முடிய.
7. தஞ்சைவாணன்கோவை : சொக்கப்பநாவலருரை. (யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் பதிப்பு.
8. கலிங்கத்துப்பரணி.
9. கந்தபுராணம் – சூரனமைச்சியற் படலம்.
10. திருவாசகம் : திருச்சதகம் முழுவதும்.

### பாடவகை II

**இலக்கணம் I** அமிசம் 100

1. நன்னூல் விருத்தியுரை : சிவஞான முனிவர் (நாவலர் பதிப்பு).
2. நம்பியகப்பொருள் : சுன்னாகம், அ. குமாரசுவாமிப் புலவருரையுடன்.
3. வெண்பாப் பாட்டியல்.

**இலக்கணம் II** அமிசம் 100

4. தொல்காப்பியம் : எழுத்ததிகாரம். (வித்துவான், சி. கணேசையர் பதிப்பு.)
5. யாப்பருங்கலக்காரிகை : சுன்னாகம், அ. குமாரசுவாமிப் புலவருரையுடன்.
6. தண்டியலங்காரம் : சுன்னாகம், அ. குமாரசுவாமிப் புலவருரையுடன்.

### பாடவகை III

**கட்டுரை எழுதல்** அமிசம் 100

### பாடவகை IV

பின்வரும் நான்கு பகுதியுள் சம்ஸ்கிருதம் அல்லது v-ம் பகுதியுடன் விரும்பிய ஏதாவதொன்றும் எடுக்கலாம்.

**i செய்யுளியற்றல்**

வெண்பா, ஆசிரியப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கட்டளைக்கலித்துறை.

**ii சம்ஸ்கிருதம்**

1. சம்ஸ்கிருத திருதீயாதர்சம் . ( S. Subramanya Vadhyar, Bookseller, Kalpathi, Palghat.)
2. சந்திராபீடசரிதம் : (ஷி பதிப்பு)

**iii சரித்திரம் :** (தமிழ்நாடு)

1. தமிழர் சரித்திரம் : ந. சி. கந்தையாபிள்ளை இயற்றியது.
2. சேரன் செங்குட்டுவன் : மு இராகவையங்கார் அவர்களியற்றியது.
3. பாண்டியர் வரலாறு : T. P. சதாசிவபண்டாரத்தார் இயற்றியது.

**iv தருக்கம்**

1. சைவப்பிரகாசனம் : முதலிலிருந்து பிரமாண இயல் முடிய.
2. தருக்க சங்கிரகம் : மூலம் மாத்திரம். (நாவலர் பதிப்பு)

**v தமிழ்ப்புலவர் சரித்திரம் :** சுன்னாகம், அ. குமாரசுவாமிப் புலவர்.

---

## பண்டித பரீட்சை

### பாடவகை I

**இலக்கியம் I** அமிசம் 100

1. புறநானூறு : 1—100 செய்யுள்.
2. அகநானூறு : களிற்றியானை நிரை 1—50 செய்யுள்.
3. கலித்தொகை : பாலையும், குறிஞ்சியும்.
4. குறுந்தொகை : 1—100 செய்யுள் (உ. வே. சு. பதிப்பு).
5. பரிபாடல் : 1—10 செய்யுள்.
6. பதிற்றுப்பத்து . 2-ம், 3-ம் பத்துக்கள்.

**இலக்கியம் II** அமிசம் 100

7. திருக்குறள் : பொருட்பால் (பரிமேலழகருரையுடன்).
8. சீவகசிந்தாமணி : கடவுள் வாழ்த்து முதல் காந்தருவதத்தையாரிலம்பகம் முடிய.
9. திருக்கோவையார் : பேராசிரியருரையுடன்.
10. பெரியபுராணம் : கடவுள் வாழ்த்து முதல் தடுத்தாட்கொண்ட புராணம் முடிய.
11. சிலப்பதிகாரம் : மதுரைக்காண்டம் (அடியார்க்கு நல்லாருரையுடன்.

### பாடவகை II

**இலக்கணம் I** அமிசம் 100

1. தொல்காப்பியம் : சொல்லதிகாரம்—சேனவரையம் (வித்துவான் சி. கணேசையர் பதிப்பு).
2. தொல்காப்பியம் : பொருளதிகாரம்; மெய்ப்பாட்டியல்—முதல் நான்கியல்—பேராசிரியருரையுடன் (வித்துவான் சி. கணேசையர் பதிப்பு)
3. யாப்பருங்கலவிருத்தி : உசாத்துணை நூலாகக் கொள்க.

**இலக்கணம் II** அமிசம் 100

4. தொல்காப்பியம் : புறத்திணையியலும், பொருளியலும்—நச்சினார்க்கினியருரையுடன்.
5. இறையனார் களவியலுரை.
6. வீரசோழியம் : அலங்காரப்படலம்.
7. பன்னிருபாட்டியல்.

### பாடவகை III

**கட்டுரை எழுதல்** அமிசம் 100

### பாடவகை IV

பிரிவு ஒன்றுக்கு அமிசம் 100

பின்வரும் பிரிவுகளுள் சம்ஸ்கிருதம் அல்லது vi-ம் பிரிவும் வேறு ஏதேனும் ஒரு பிரிவும்.

**i சம்ஸ்கிருதம்** அமிசம் 200

1. மார்க்கோபதேசிகை : (Sanskrit First Book by Bandarkar) தமிழ் மொழிபெயர்ப்பு உரையுடன்.
2. ஹிதோபதேசம் : மித்ரலாபம் 1—5.

**ii தருக்கம்**

தருக்க சங்கிரகம் ; அன்னம்பட்டீயம்.

**iii மொழி வரலாறு**

1. தமிழ்மொழி வரலாறு : (வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்).
2. கால்ட்வெல் ஒப்பிலக்கணம்—முன்னுரை. (தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்)
3. திராவிடப்பிரகாசிகை.

**iv இலக்கண ஆராய்ச்சி**

1. தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி : (சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு).
2. தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி: (மு. இராகவையங்கார்)
3. இலக்கணக் கட்டுரைகள் : (V. வேங்கடராஜுலு ரெட்டியார், விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம்).

**v செய்யுளியற்றல் :** பாவும், பாவினமும்.

**vi தமிழ் இலக்கிய வரலாறு** (Compulsory)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர் கதை

# மலர்ப் பலி

—சொக்கன்—

[சென்றவாரத் தொடர்ச்சி]

அதிபர் புவனேஸ்வரியிடம் தம் முன்னிலையில் மன்னிப்புக் கேட்கும்படி கூறினர். நான் தயங்கவில்லை. மன்னிப்புக் கேட்டேன. அவள் அந்த அளவிலே அதற்கு மேலும் பேச விருப்பாதவளாய் இனி அதுபற்றி ஒன்றும் பேச வேண்டாம் என்று சொல்லி விட்டுப் போனுள்.

நான் சிறிது மன அமைதியுடன் பெருமூச்சு விட்டேன். புவனுவிடம் மன்னிப்புக் கேட்டசமையத்தில் அதிபர்கூறிய வாசகங்கள் இப்பொழுதும் என் நினைவிற் பத்திரமாகவிருக்கின்றன. அவர் சொன்னுர்:

"உன்னை என்னசெய்வதென்றே தெரியவில்லை. நாகராஜா! முதல்தடவையாக எச்சரிக்கிறேன். இனிமேல் இத்தகைய விஷயங்களில் இறங்கினுயானுல் என்னிடம் மன்னிப்பை நீ எதிர்பார்க்கவே முடியாது. பாடசாலையின் கண்ணியம் உன்னைவிட எவ்வளவோ பெறுமதியுள்ளது என்பதை நீ யுணரவேண்டும்......! கலாசாலையென்பது காதலரங்கல்ல. சகா மாணவிகளைச் சகோதரிகளாகச் சகா மாணவர்கள் கருத வேண்டியதும், சகா மாணவர்களைச் சகோதரர்களாகச் சகா மாணவிகள் கருத வேண்டியதும் மிக அவசியம்.'

**28**

என் சிந்தனை கலைந்தது. ஓர் பெருத்த மழை பெய்ததன்பின்பு வானத்தைக் கவிந்திருக்கிறதே ஒரு மந்தார சூழ்நிலை? அந்நிலையில்தான் இருந்தது என் மனம். ஓர் பெரும் பாரம் நீங்கினது போன்ற உணர்ச்சி! கடந்துபோன சிந்தனைகளின் ஞாபகார்த்தமாக ஒரு சிறுவேதனை! இருளில் பயந்து பயந்து பதுங்கி நடந்துவருங் குழந்தை விளக்கையும் பாதுகாப்பாக மனிதரையும் காணும்போது அடையும் ஆறுதல் போன்று இன்றைய நிலையில் நான் அடைந்திருக்கும் ஒரு ஆறுதல்! இவையெல்லாம் என்ன? இந்த உள்ளம்தான் எத்தனை உணர்ச்சிகளாற் பூசி மெழுக்கப்பட்டிருக்கிறது? நிமிஷத்துக்கு நிமிஷம் அதில் தென்படும் நிறங்களை வான வில்லிற்கூட காணமுடியாது.

நான் சாய்வுநாற்காலியிற் சாய்ந்துகொண்டு பத்திரிகையை வாசிக்கலானேன். பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்தேனு? பத்திரிகையிற் கண்கள் பதிந்திருந்தது உண்மை. மனம் சிந்தனை நிச்சயமாகப் பதியவில்லை. என் மனக்கண்கள் சிந்தனை என்னும் யன்னல் வழியாகப் பல திக்கையும் பார்த்துக்கொண்டிருந்தன.

'நமஸ்காரம்' என்ற வார்த்தை என் காதில் விழுந்தபோது திடுக்குற்றுத் திரும்பினேன். புவனு என் எதிரில் நின்ருள். நானும் பதிலுக்கு நமஸ்கரித்துவிட்டு அவளை வரவேற்றேன். ஒரு ஆசனத்தில் இருக்கச்செய்தேன்.

நான் காலையில் பார்த்த புவனுவுக்கும் இப்போதைய புவனுவுக்கும் எவ்வளவு தூரம் வித்தியாசம். விரக்தியும், வேதனையும் நிறைந்த மனோநிலையில், வயதிற்கு அப்பாற்பட்ட முதுமையோடு ஆடம்பரமற்ற உடையலங்காரத்துடன், காலையிற் காணப்பட்ட புவனுவா இவள்?

புகை மூடுண்ட சித்திரம் போன்று கவர்ச்சியற்றுக் கிடந்த தனது இளமையையும், அழகையும் தன் அலங்காரங்களால் வருவிக்க அவள் முயற்சித்திருக்கிறுள்; ஓரளவு தன் முயற்சியில் அவள் வெற்றி பெற்றேயிருக்கிறுள். எனது சொன்னுல் தவறில்லை. ஆனுல் கவனியாது விட்டிருந்ததால மெலிந்துபோயிருந்த அவள் உடலில் மட்டும் முந்திய கவர்ச்சி ஊட்டப்படவில்லை! ஒரு நாளில் நடக்கக் கூடிய காரியமா இது?

வெள்ளை அடிக்கப்பட்ட சுவரில் உடைந்த காரைகள் அந்த வெள்ளையை மீறிக்கொண்டு வெளித்தெரிவது போன்று அலங்கரிக்கப்பட்ட அவள் உடலையும் மீறிக்கொண்டு முதுமை எட்டிப்பார்த்தது. இருபத்தினுலு வயதுப் பெண் தன்னை அழகுபடுத்திப் பதினுறு வயதுள்ள இளநங்கையாக உலகுக்குக் காட்டுவதென்பது சிரமந்தான்? இவையெல்லாவற்றையும் விட இளமையை அளிக்கும் காயகல்பமான உத்ஸாகமும் அவளிடை இல்லை. அவள் எப்படித்தான் [illegible] அதிலே நேரமாகவில்லை!

'இவளுக்கு ஏன் இந்த அலங்கார விருப்பு' என்று நினைத்தவண்ணம் மௌனமாய் அவளை உற்று நோக்கினேன் அவள் சிரித்தாள்? இதற்குப் பெயர் சிரிப்பா? அந்தநாளில் புவனு சிரித்தால் மணிகள் கிலுங்குவது போலல்லவா இருக்கும்.

என்னுடைய மௌனத்தையும் வியப்பையும் போக்க வேண்டி "என்ன. இப்படி உற்றுப் பார்க்கிறீர்கள்? நான் வந்தது வெறுப்பாக இருக்கிறதோ"? என்று புவனு பாதி கிண்டலாகவும், பாதி பரிகாசமாகவும் கேட்டாள்.

நான் "இல்லையே! நெடுநாட்களுக்குப் பிறகு என் அன்புக்குரிய ஒருவரைச் சந்திப்பதால் ஏற்பட்ட அதிர்ச்சியும் வியப்புந்தான் என்னை மௌனியாக்கிவிட்டன?" என்றேன்.

"உங்களுக்கு மகத்தான அபராதம் செய்த இந்தப் பாவியை இன்னும் நீங்கள் மறவாது அன்பு செலுத்துகிறீர்களா? அப்படியானுல் நான் பாக்கியசாலிதான்" முந்திய கிண்டலுக்கும் பரிகாசத்துக்கும் பதில் இதில் வேதனையும், ஏக்கமுமாகஇருந்தது.

"புவனு! உண்மையில் அபராதஞ் செய்தவன் நான் அல்லவா? நீங்கள் என்னைப் பரிகாசம் செய்கிறீர்களா?" என்று பதில் இறுத்தேன். உண்மையில் புவனுவின் அந்த வார்த்தைகளுக்கான அர்த்தம் எனக்கு உடன் புரியவில்லை; பின்புதான் புரிந்தது. நான் மீண்டும் சொன்னேன். "வியர்த்தமான பல ஆசைக் கோட்டைகளைக் கட்டிக்கொண்டு என்னை மட்டுமல்ல உங்களையும் அக்கோட்டைக்குள் புகச் செய்ய வேண்டும் என்று நான் முயற்சித்தது இல்லை. பலவந்தஞ் செய்தது எத்தகைய பிழை? அந்தப் பிழைக்கு நான் எந்தச் சென்மத்திலும் மன்னிப்புப்பெறுவது இயன்றகாரியமல்ல!"

நான் எதிர்பாராதிருக்கும் சமையத்தில் "புவனு! என் காலடியில் விழுந்து அவற்றைப் பலமாகக் கட்டிக்கொண்டாள். என் வியப்பு எல்லை கடந்தது! இவளுக்குப் பைத்தியமா பிடித்துவிட்டது? கால்களை விடுவிக்க முயற்சித்தேன்; முடியவில்லை! "புவனு! என்ன இது?" என்று கேட்டேன்.

விம்மல் பொருமல்களுக்கிடையில் அவள் சொன்னுள். "நாகராஜா! நான் மகாபாவி! நான் உங்களை மிக மிகச் சோதித்துவிட்டேன்! என்ருே ஒரு நாளைக்கு உங்கள் காலடியில் விழுந்து நான் செய்த மகத்தான பிழைகளுக்காகக் கதறியழ வேண்டும்; நீங்கள் காலால் உதைத்துத் தள்ளினுலும் 'அதுவே என் பாக்கியம்' என்று களிகொள்ள வேண்டும்என்றெல்லாம் கனவு கண்டுகொண்டிருந்தேன். என் கனவு பலித்துவிட்டது. நாகராசன்! இன்று உங்களை நான் ஒரு நாளில் காதலித்தேன் இருதயபூர்வமாக, என்ருல், நீங்கள் நம்பமாட்டீர்கள்! ஆனுல் உண்மையிலேயே, நான் உங்களைக் காதலித்தேன்."

இது என்ன நாடகமா? எதிர்பாராத, எத்தனையோ எததனையோ விஷயங்கள் என் கண்முன் நடக்கின்றன. புவனுவா இப்படிச் சொல்கிருள்? அல்லது நான்தான் கனவு காண்கிறேனே? நான் கேட்டேன் "புவனு நீங்கள் சொல்வது புரியவில்லையே?"

புவனு தன் தலையை நிமிர்த்திக் கொண்டு சொன்னுள்: "நாகராஜன் உலகத்திலேயே நான் உங்கள் மீது வைத்த காதல் அதிசயமானது தான். என்னுடைய மனதின் அடிப்படையில் நான் தன்மதிப்புக்குக் கொடுத்த மதிப்பு உங்கள் காதலுக்கும் கொடுக்காததுதான் நான் செய்த பெரும் பிழை!'புவனு! புவனு!' என்று நீங்கள் என் காலடியைச் சுற்றவேண்டு மென்றும், நான் உங்களை அலட்சியமாக நோக்கவேண்டும் என்றும் என் தன்மதிப்பு எனக்கு பாடஞ் சொல்லித் தந்தது. 'இது பிழை, பிழை' என்று அடிக்கடி என் மனச்சாட்சி கதறிக்கொண்டு தான் இருந்தது. ஆனுல் நாகராஜன்! என் கௌரவம் இருக்கிறதே? அது காதலைக் கணித்து வைத்திருந்த முறையே வேறு. அது காதலனைச் சமபங்காளியாகக் கருதவில்லை; தன்கீழ் அடிமையாகக் கருதியது." அவள் விம்மினுள்; பொருமினுள்; உயிர்ப்பொம்மையாகத் தன் உணர்ச்சிகளையெல்லாம் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த பழைய புவனுவா இவள்.

என்னை அறியாமலே என் இருதயத்திலிருந்து நீண்ட பெருமூச்சொன்று வெளிவந்தது. நெடுநாளாக என் இருதயத்தில் இருந்த பெரும் பாரம் ஒன்று அப்பெருமூச்சின் மூலமாக வெளிப்போனது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. "புவனு! உண்மையில் இப்பொழுதுதான் என மனம் அமைதியடைந்திருக்கிறது. ஆனுல் புவனு! இன்று நீ என் சகோதரி! உலகில் உள்ள ஒவ்வொருபெண்ணையும் சகோதரியாகப் பாவிப்பதில் ஓர் மனபரிபக்குவம் உண்டாகத்தான் செய்கிறது. உணர்ச்சிகளில் திடீர் திடீரென்று ஆட்படும் நான் இன்று ஓர் பிரமச்சாரியாக வாழ்க்கை நடத்துகிறேன் என்று சொன்னுல் உனக்கு வியப்பாகத்தான் இருக்கும்! ஆனுல் அது உண்மை!"

புவனு திடுக்குற்று எழுந்திருந்தாள். அவள் இதை எதிர்பார்க்கவில்லை என்பது அவள் முகபாவத்திலிருந்து தெரிந்தது. அவள் கேட்டாள் "நீங்கள் உங்கள் பிரதிக்ஞையிலிருந்து என்றுமே தவறமாட்டீர்களோ"?

"புவனு! நான் பிடிவாதக்காரனல்ல. ஆனுல் எனக்கும் மனச்சாட்சி என்று ஒன்றிருக்கிறதல்லவா? நான் உனக்கு எழுதிய கடிதத்தில் காட்டியிருந்தேனே என் பிரதிக்ஞை பற்றி! அது வெறும் பைத்தியகாரனின் பிதற்றலல்ல என்பதை நீ மறந்துவிடக்கூடாது. அன்றைய நாகராஜன் காதலே உலகம் என்று கத்தித்திரிந்தானே அந்த நாகராஜன் இறந்து எவ்வளவோ காலமாகிவிட்டது. இன்று நான் புதியவன்! முற்றிலும் புதியவன்! புவனு! பிரதிக்ஞை என்பது வெறும் ஐந்தெழுத்துச் சொல்லென்று நினைக்கிருயா?

—தொடரும்

இப் பததிரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

## பாடவிதானம்—சம்ஸ்கிருதம்

### பிரவேச பரீட்சை

#### பாடவகை I

**காவியம்** அமிசம் 300

1. ரகுவம்சம் : முதல் 2 சர்க்கம்.
2. அபிநவபாடாவலி — முதற் புத்தகம் (Macmillan & Co., Madras).
3. ஹிதோபதேசம் : மித்திரலாபம்.

#### பாடவகை II

**வியாகரணம்** அமிசம் 200

1. மார்க்கோபதேசிகை : (K. L. V. Sastri).
2. லகுகௌமுதி : சந்தி முடிய.
3. சந்திராலோகம் : முதல் 30 அலங்காரம்.

#### பாடவகை III

அமிசம் 100

i சொல்வதெழுதல் ii மொழிபெயர்த்தல்

#### பாடவகை IV

பிரிவு ஒன்றுக்கு அமிசம் 50

1. சியாமளாதண்டகம்.
2. நீதிசாஸ்திரம் : முதல் 100 சுலோகம்.
3. சிவாநந்தலஹரி : முதல் 50 சுலோகம்.
4. முகுந்தமாலை.

( All from K. L. V. Sastri )

### பாலபண்டிதர்

#### பாடவகை I

**காவியம்** அமிசம் 300

1. குமாரசம்பவம் : முதல் 2 சர்க்கம்.
2. சம்பூராமாயணம் : முதல் 2 காண்டம்.
3. பார்வதீபரிணயம்.
4. சந்திராபீடசரிதம்.

#### பாடவகை II

**வியாகரணம்** அமிசம் 200

1. லகுகௌமுதி தசவிகரணி முடிய.
2. காவியாதரிசம் : 1-ம் அத்தியாயம்.

#### பாடவகை III

அமிசம் 100

i மொழிபெயர்த்தல் ii வியாசமெழுதுதல்

#### பாடவகை IV

பிரிவு ஒன்றுக்கு அமிசம் 50

1. தேவீஸ்தோத்திரமஞ்சரி.
2. திலீபசரிதம்.
3. பர்த்ருஹரிநீதிசதகம்—முதல் 50 சுலோகம்.
4. கீத்த கோவிந்தம்.

### பண்டிதர்

#### பாடவகை I

**காவியம்** அமிசம் 300

1. நைஷதம் : 5-ம், 6-ம் சர்க்கம்.
2. சாகுந்தலம்.
3. சிசுபாலவதம் : 3-ம், 4-ம் சர்க்கம்.
4. தசகுமார சரிதம் : பூர்வபீடிகை.
5. பாரதசம்பூ : முதல் இரண்டு ஸ்தபகம்.

#### பாடவகை II

**வியாகரணம்** அமிசம் 200

1. சித்தாந்த கௌமுதி : பூர்வார்த்தம்.
2. காவியாதர்சம் : 2-ம், 3-ம் அத்தியாயம்.
3. விருத்தாத் நாகரம் : முதல் 3 அத்தியாயம்.

#### பாடவகை III அமிசம் 100

i மொழிபெயர்த்தல் ii வியாசமெழுதுதல்

#### பாடவகை IV

பிரிவு ஒன்றுக்கு அமிசம் 50

1. லௌகிக நியாய சஞ்சரி
2. தர்க்கசங்கிரகம் (நியாயபோதினி).
3. சைவசித்தாந்த பரிபாஷை.
4. அபிநவபாடாவலி—3-ம் புத்தகம்.
5. சிவலீலார்ணவம்—முதல் சர்க்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The
# EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, Mar. 20, 1949 | No. 33

# பரமஹம்சர் சமரசம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தே தள்ளுகின்றதென எண்ணுகிற மேல்நாட்டாரின் பொருளற்ற வார்த்தைகளுக்கு எமது இராமகிருஷ்ணரின் தூய வாழ்வு நல்விடை கூறும். இந்துசமயத்தவனொருவன் தன் வாழ்க்கையினின்றும் பிறழ்ந்தால் அதற்காக அவனது சமயத்தையோ அன்றிக் கொள்கைகளையோ இகழ்ந்துரைத்தல் எம்மட்டிலும் பொருந்தாது. தனது அருமையான மனைவியுடன் உலகில் வாழ்ந்து ஒரு தூய பிரமச்சரிய வாழ்க்கையை உலகுக்கு எடுத்துக் காட்டிய பெருமை ஸ்ரீ இராமகிருஷ்ணருக்கே உரியது. காதல் என்ற நற் பண்பாட்டுக்கும் காமம் என்ற பேய்க்கும் பேதம் தெரியாப் பேதையர்க்குப் பகவானின் வாழ்வு ஓர் எடுத்துக் காட்டாகும். பொன்னாசை மீது அவர்பெற்ற வெற்றியும் வியக்கத்தக்க தொன்றாகும். நாணயங்களைத் தீண்டும் போது தேள் கொட்டியது போன்ற வலியை அது அவருக்கு உண்டாக்கியது. அவரது சொந்தச் செலவுக்காக ஒருவர் ஒரு சிறு நிதியை வழங்க முன்வந்தபோது உன் பணம் எனக்கு வேண்டாம். அதை அங்கீகரித்தால் என் மனம் எப்போதும் அதிலேயே யிருக்கும் என்று மறுத்தார். அதற்கு அக்கனவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரது உறவினர் ஒருவர்பேரில் வட்டிக்குப் போட்டு வைக்கிறேன் என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ இராமகிருஷ்ணர் அது இன்னும் கெட்டதாகும். என் பணத்தை இன்னாரிடம் கொடுத்து வைத்திருக்கிறேன் என்ற சிந்தனையே எப்போதும் உண்டாகும் என்று அதனைப் பெற மறுத்துவிட்டார். கனவான் தான் என்னசெய்வார்! சுருங்கக் கூறில் ஸ்ரீ இராமகிருஷ்ணரது உலக வாழ்க்கை:

"அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாம்
குன்றே யனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலை
யோ
இன்றோர் இடையூ றெனக்குண்
டோ என்தோள் முக்கண்
எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே"

என்ற மணிவாசகரின் திருவாசகத்திற்கு உதாரணமாயிற்று.

## பொன்மொழிகள்

இன்று மக்களின் உள்ளத்தை அலைத்துவரும் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் பகவான் பேசியுள்ளார். மண்ணுலக வாழ்க்கையில் மனதை முழுக வைப்பவன் மண்ணுக்கு இரையாவான். தினவெடுக்கும் கடியைச் சொறிந்து கொடுக்கும்போது வெகு இன்பமாகத்தான் இருக்கின்றது. ஆனால் அப்பாலுண்டாகும் எரிவோ வெகு துன்பத்தைத் தருவதாகும்; பொறுக்கக் கூடாததாயு மிருக்கும். அதுபோல உலக விஷயங்களும் முதலில் வெகு மனோகரமாக இருக்கின்றன. பகவானிடத்தில் பக்தி, நமக்குரிய கடமைகளை நம்மால் இயன்றளவு பற்றின்றிச்செய்தல் என்பன அவரால் வற்புறுத்தப்பட்ட கொள்கைகள். முழுமனதோடும் மாறாத உறுதியுடனும் உழைப்பின் முடிவில் மெய்ஞ்ஞானம் பெறுவர் என்றும் பிறர்க்குச் செய்யும் தொண்டால் நம் வாழ்வு தெய்விகமாக்கப்பட வேண்டுமென்றும் பிறவிப் பெரும் பயன் எய்துதலேயே நம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ளவேண்டுமெனவும் சுவாமிகள் எமக்கு நற்புத்தி புகட்டுகின்றார். அவன் அவனுக்காகவே என்பதற்குப் பதிலாக ஒவ்வொருவரும் அனைவர்க்குமாகவே என்ற விரிந்த பான்மை நமக்கு வேண்டும். மனிதன் இம் மண்ணுலகில் ஒரு வழிப்போக்கனே யாதலாலும் வாழ்வு மரணத்தோடு முடிவதில்லையாதலாலும் ஒருவன் உலக விஷயங்களைத் தன் வாழ்க்கையின் சாரமாகவும் முடிவாகவும் கருதுதல் தகாது. விஞ்ஞான ஆராய்ச்சிகள் முன்னேறும் வேகத்தைக்காட்டிலும் பன்மடங்கு வேகமாக ஆத்ம பலமும் தெய்விக சிந்தனைகளும் முன்னேறவேண்டும். ஏட்டு அறிவுமட்டும் உண்மையான ஞானம் பயப்பதில்லை. பேச்சு என்ற கலையை நீக்கிப் பயிற்சியென்ற பயிரைப் பேண வேண்டும். சிதறிக் கிடக்கும் மனோ சக்திகளை ஓரிடத்திற் சேர்த்து ஒருமுகப்படுத்திப் பிரயோகப்படுத்தவேண்டும்.

## அணிகலம்

இராமர், கிருஷ்ணர், புத்தர், கிறிஸ்துநாதர், முகமது, சங்கரன், என்போரது பேரொளி மண்டலத்தில் இராமகிருஷ்ணருக்கும் ஒரு மகத்தான இடம் உண்டு என்றும் ஆன்மஞானம் சன்மார்க்கம் சாந்தம் இனிமை அன்பு என்பவற்றுக்குக் கிழ் நாடே உறைவிடமென்றும் உலக மாந்தர் இன்று உணருகின்றனர். சர்வ சமய சமரச நிலைக்கு வித்திட்ட மகான் ஸ்ரீ இராமகிருஷ்ணர், அவர் பார்க்குமிடம் எங்கணும் நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தன் ஒருவனே என்றும் அவனின் திருப்பெயர்கள் பலவாகும் என்றும் கண்டார். வாழ்வில் முக்காற்பங்கு செலவுசெய்து இனம், சாதி, பேதம், நிறம், குணம் என்பன பாராட்டாது அனைவர்க்கும் குறைவற அள்ளிக்கொடுத்தார். அவர் வாயிலாகப் பெருகிய அருளின் வாய்ப்பட்டு எண்ணிறந்த மக்கள் வாழ்க்கை திருந்தப் பெற்றனர்.

அற்றது பற்று எனில் உற்றது வீடு என்பதற்கு அவர் வாழ்வு இலக்கியமாயிற்று. சொல்லிய அனைத்தையும் கடைப்பிடித்து நடைமுறையிற் காட்டிக்கொடுத்தார். உயிருள்ள இலக்கியங்கள்போன்று உலகுக்கு அணிகலன்களாகி விளங்கும் அவரது பொன்மொழிகள் என்றும் நின்று நிலவும் பண்பும் பயனுமுடையன. கடமைகளும் வேலைகளும் நிறைந்த உலக வாழ்க்கையை விட்டுவிட்டுக் காட்டுக் கோடி மூக்கைப் பிடித்து மூலையில் உட்கார்ந்துவிட்டால் உலகத்தைத் துறந்துவிட்டதாக எண்ணிவிடக் கூடாதென்று துறத்தலின் இரகசியத்தைக் காட்டினார். தண்ணீரில் மூழ்கியவன் ஒரு மூச்சுக்கு எவ்வளவு தவிப்பானோ அவ்வளவு தீவிரமாகக் கடவுட் காட்சிக்கு மனிதன தவிக்க வேண்டும். எல்லா மனிதர்களிடமும் ஈஸ்வரன் இருக்கின்றான். ஆனால் ஈஸ்வரனிடத்தில் எல்லா மனிதர்களுமில்லை என்று ஈசனின் சர்வ வியாபக நிலையைக் காட்டினார். பிறர்க்குத் தொண்டு செய்வதிலேயே வாழ்நாள் கழிகின்றதெனப் பெருமை பேசிக்கொள்ளுதல் ஆணவத்தின் முனைப்பைக் காட்டுவதாகும் என ஆணவத்தை அறுக்கும் வழியையும் காட்டுவார்.

## உலக ஞானநெறி

"நீர் கடவுளைக் கண்டதுண்டா?" என்ற விவேகாநந்தரின் வினாவுக்கு "ஆம்" என்று விடையளித்தவர் ஸ்ரீ இராமகிருஷ்ணர். பாரதமாதாவின் மணிக்கொடியைச் சர்வ சமய உலகில் நாட்டி ஆத்மீகத்துறையில் அதிகிவாரமில்லாதுபோனால் மேல்நாட்டு நாகரிகம் முழுவதுமே ஐம்பது ஆண்டுகளில் தூள் தூளாக இடிந்துபோய்விடும் என்று ஆன்ம ஞானத்தை மேல்நாட்டாருக்கு அறிவுறுத்திய வீரன் விவேகாநந்தர். அவருக்கு ஞானப் பாலூட்டி வளர்த்தவர் ஸ்ரீ இராமகிருஷ்ணர். உலகம் ஞான நெறி வழுவாது நின்று சர்வ சமய சமரச நிலையில் புதியதோர் நாகரிகத்தை ஆக்கவேண்டுமென்பது ஸ்ரீ இராமகிருஷ்ணரதும் அவரின அரிய சிஷ்யர்களினதும் குறிக்கோளாகும். அந்நன்னோக்கம் தழைத்தோங்கி உலகம் இடம்பெறுவதாக! உலகில் அன்பும் தொண்டும் வீரமும் பல்கிப் பெருகுக.

குறிப்பு: கொழும்பு வானொலியில் 1-3-49-ல் பேசப் பட்டது.

## அத்திலாந்திக் ஒப்பந்தம்

அத்திலாந்திக் ஒப்பந்தத்திற் கையெழுத்திட எட்டு நாடுகள் ஒப்புக்கொண்டுவிட்டனவென்ற செய்தி ஏற்கனவே வெளியாயிற்று. இவ்வெட்டு நாடுகளைத் தவிர போத்துக்கல், டென்மாக், இத்தாலி, அயர்லந்து ஆகிய நான்கு நாடுகள் இவ்வொப்பந்தத்திற் கைச்சாத்திட உடன்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## சபைத்தலைவர் மறுத்தார்!

தற்காலிக வித்தியாதிபதியாகக் கடமையாற்றிய திரு. டபிள்யூ ஏ. டி சில்வா தமது பதவியிலிருந்து திடீரென ஓய்வெடுத்துக்கொண்டது சம்பந்தமாக திரு. வி. சுந்தரலிங்கம் அவர்கள், பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையில் ஆலோசிப்பதற்கு எடுத்துக்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொண்டபோது அதனைச் சபைத் தலைவர் மறுத்துவிட்டார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு திருமகள் நிலையம் கா. பொன்னையா அவர்களால் சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் 1949-ம் ஆ மார்ச் மீ 20உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.